தேவமலர்

ஸ்வீடிஷ் கதை

ஜோதி நிலையம்

சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணா பத்து

வெளி வந்தவை

காதற் கதை (இந்தாலியக் கதை)	க. நா. சுப்ரமண்யம்
வெற்றி (பிரஞ்சுக் கதை)	'வாணீசரணன்'
காளி (ஜெர்மன் கதை)	க. நா. சுப்ரமண்யம்
காதற் கீதம் (ரஷ்யக் கதை)	ரா. ஆறுமுகம்
பெண் மனம் (ஸ்பானியக் கதை)	ப. திருமலை
போலி (ஆங்கிலக் கதை)	எஸ். ராஜா
தேவமலர் (ஸ்விடிஷ் கதை)	க. நா. சுப்ரமண்யம்

அடுத்து வருபவை

துர்லக் (செக்கோஸ்லோவேகியக் கதை)	த. நா. குமாரஸ்வாமி
மலைமகள் (அமெரிக்கக் கதை)	பெ. கோ. சு.
நாஸ்திகனின் கடவுள் (பிரெஞ்சுக் கதை)	க. நா. சு.

இன்னும் —

நார்வே, போலந்து, சீனா, ஜப்பான், பின்லந்து, டென்மார்க் முதலிய தேசத்துக் கதைகளும் வெளிவருகின்றன

ஜோதி நிலையம்

74, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை

தேவமலர்

ஸ்வீடிஷ் கதை

ஆசிரியை
ஸெல்மா லாகர்லெவ்

மொழிபெயர்ப்பு
க. நா. சுப்ரமண்யம்

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி :: சென்னை

சர்வ தேசக் கதை மலர் – 7
முதற் பதிப்பு 1944

விலை அணா பத்து

தயாராகிறது
இதே ஆசிரியை எழுதிய
கன்னியாமி
க. நா. சு. மொழிபெயர்ப்பு

கபீர் அச்சுக்கூடம், சென்னை

இந்தக் கதை

இது வரையில் சர்வதேசக் கதை மலர் வரிசையில் ஆறு கதைகள் படித்துவிட்டீர்கள் ; ஆறும் காதல் கதைகள். **தேவமலர்** என்னும் இந்தக் கதை ஏழாவது கதை. இது காதல் கதை அல்ல. ஆனல் சுவாரசியத்திலே மற்ற கதைகளுக்குச் சற்றும் தாழ்ந்த தல்ல. கலையம்சம்களில் எப்படி என்ருல்......

சற்று விவரமாகவே சொல்லுகிறேன்.

எல்லோருக்கும் தெரிகிறது இன்று ரஷ்யா என்ருல். அரசியல், இந்த யுத்தம் முதலிய பல காரணங்களால் நாம் ரஷ்யாவைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டிருக்கிறேம். ரஷ்ய இலக்கியத்திலும் ஓரளவு நமக்குப் பரிசயம் ஏற்பட்டிருக்கிறது. டால்ஸ்டாயைப்பற்றி நாம் அறிந்திருக்கிறேம்—பலருக்கு அவர் மகாத்மா காந்தியின் குரு என்று சொல்லத்தக்கவர் என்பது தெரியும். டால்ஸ்டாய், செக்காவ், டாஸ்டாவ்ஸ்கி, கோர்க்கி—ஏன், இலக்கிய ரஸிகனுக்கு எல்லா ரஷ்ய ஆசிரியர்களுடைய பெயர்களையுமே சொல்லிவிடலாமே என்று தோன்றுகிறது. நம் நாட்டுப் பண்டைய இலக்கியங்களைப் போலவே ரஷ்யர்களின் இன்றைய கதைகளும், நாவல்களும் மனித உள்ளத்தை, மனித உள்ளத்தின் அடிப்படையைத் தொடுகின்றன என்று நாம் அறிந்துகொள்ள ஆரம்பித்து விட்டோம்.

ரஷ்யாவுடன் இலக்கியத்திலே போட்டிபோடக்கூடிய ஒரு சிறு நாடு ஐரோப்பாவிலேயே இருக்கிறது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. ஸ்காண்டிநேவிய தேசங்களிலே பல பகுதிகள் இருக்

கின்றன—ஸ்வீடன், நார்வே, டென்மார்க் என்று. இந்தத் தேசங்கள் ஒவ்வொன்றிலும் இலக்கியம் அற்புதமாக அமைந்திருக்கிறது. ஐரோப்பிய இலக்கியத்தின் சிகரமாக ஸ்காண்டிநேவிய இலக்கியத்தைச் சொல்லலாம் என்பதே அறிஞர் கருத்து.

ஸ்காண்டிநேவிய இலக்கியத்தின் ஒரு விசேஷ அம்சம் என்ன என்ருல் அது இன்னும் கடவுளை மறந்துவிடவில்லை என்பதுதான். கடவுளை மறக்காதவர்கள்—இந்த இருபதாம் நூற்ருண்டிலும் மறந்து விடாதவர்கள் ஸ்காண்டிநேவியர்கள்தான் என்று சொல்வது மிகையாகாது. அவர்களுடைய கலை எல்லா அம்சங்களிலும் கடவுளைவிட்டு விலகி விடாமல் நிற்கிறது. மத விஷயமாகத்தான் அவர்கள் கதைகள் எழுதுகிருர்கள் என்பதில்லை. மதம் என்பது வெறும் சமூகக்கோப்பு. மனித உள்ளத்தின் அடிப்படைகளை மனிதன் மறக்காமல் காப்பாற்றுவது இன்று ஐரோப்பாவிலே ஸ்காண்டிநேவிய இலக்கியம் ஒன்றுதான் என்று சொல்லலாம்.

ரஷ்ய இலக்கியத்திலே வேடிக்கைகள் உண்டு; விந்நியாசங்கள் உண்டு: தத்துவங்கள் உண்டு. மனித உள்ளத்தைத் தொட்டு தூங்கும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் சக்திகள் பலவற்றை அவர்கள் கையாண்டிருக்கிருர்கள். ஆத்மவிசாரணையை அவர்கள் வெகு அற்புதமாகச் செய்திருக்கிருர்கள். இந்த இலக்கியத்துடன் மற்ற தேசத்து—அதுவும் மேல் நாடுகளின் இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை இருக்கும் இடம் தெரிவதில்லை. ஏதோ உலகத்திலில்லாத விந்தைகளைப் பலவிதமாகக் கையாண்டிருக்கிருர்கள். வேதாளம் முருக்க மரத்திலிருந்து தலைகிழாகத் தொங்கியபடியே உலகைக் காண்பதுபோல இருக்கிறது இவர்களுடைய எழுத்தும் நோக்கும். ஆனல் ரஷ்ய இலக்கியத்துடன் ஸ்காண்டிநேவிய இலக்கியத்தை ஒப்பிடும்போது ரஷ்ய இலக்கியத்தின் மேன்மைகளும் மங்குகின்றன. இந்தியர்களுடையதைப் போலவே ஸ்காண்டிநேவியர்களுடைய இலக்கியமும் மற்ற கலைகளும் கடவுளின் வழிவிட்டு விலகவில்லை என்பதே அவர்களுடைய கலை மேன்மைகளின் முக்கிய காரணம்.

ஸ்விடன் தேசத்தின் சிறந்த இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர் ஸெல்மா லாகர்லெவ். அவர் பிறந்தது 1848-ல், இறந்தது

1940-ல். உயிர்வாழ்ந்த எண்பத்திரண்டு வருஷங்களுக்குள் அவர் உலகத்திலுள்ள இலக்கிய ரஸிகர்களுடைய மனசை யெல்லாம் கவர்ந்துவிட்டார். 1891-ல் அவருடைய முதல் புஸ்தகம் 'கெஸ்டா பெர்லிங்' வெளிவந்தவுடனேயே அவர் பெயர் ஸ்வீடன் தேசம் பூராவும் பரவிவிட்டது! 'ஜெருஸலம்' என்கிற புஸ்தகம் வெளி வந்தவுடனே அவர் பெயர் ஸ்காண்டிநேவிய தேசங்கள் பூராவும் பரவிவிட்டது. பின்னர் வரிசையாக 'போர்ச்சுகலியாவின் சக்கரவர்த்தி', 'லொவன்ஸ்கில்டின் கணையாழி', 'லில்லியக் ரோனு வீடு' என்று பல கதைகள் வெளிவந்து உலகத்தோரின் மனசை மயக்கின. 1909-ல் அவருக்கு நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டது. ஐரோப்பிய பாஷைகள் எல்லா வற்றிலுமே அவருடைய கதைகள் மொழிபெயர்க்கப் பட்டிருக் கின்றன.

ஸெல்மா லாகர்லாவுடன் ஒப்பிட வேண்டுமானால் உலக இலக்கியத்திலே வேறு கதாசிரியர்களைச் சொல்லமுடியாது. கவி களைத்தான் சொல்லவேண்டும். ஹோமர், டாண்டே, ஷேக்ஸ்பியர், மகா பாரதத்தின் ஆசிரியர் இவர்களுடன் இடம் பெறுகிற இலக் கிய கர்த்தா அவர்.

'தேவமலர்' அவருடைய சிறந்த கதைகளில் ஒன்று. ஸெல்மா லாகர்லெவுடைய சிறந்த அம்சங்களெல்லாம் இக்கதை யிலே காணப்படுகின்றன.

தேவமலர்

பல குற்றங்களைச் செய்து மாட்டிக்கொண்ட அந்தத் திருடன் தன் மனைவியுடனும் ஐந்து குழந்தைகளுடனும் தலை மறைவாகக் காட்டுப்பிரதேசத்தில் ஒரு ரகசியமான குகையில் வசித்து வந்தான். கியிங்கே காட்டைவிட்டு அவன் வெளியே வரமுடியாது—நகரவாசிகள் யாராவது கண்டுவிட்டால் அவனைப் பிடித்துக்கொடுத்து விடுவார்கள். அதிகாரிகள் அவனைச் சிறையில் அடைத்து வாட்டி விடுவார்கள். காட்டுப் பிரதேசத்தில் யாராவது அந்நியர்கள் வந்து வழி தெரியாமல் மாட்டிக்கொண்டால், திருடன் அவர்கள் பொருளைப் பிடுங்கிக்கொள்ளுவான். பணக்கார அந்நியர்கள் கையில் பணத்துடன் அந்தக் காட்டுக்குள் வருவது கொஞ்சம் கொஞ்சமாக அரிதாகிக்கொண்டிருந்தது. கியிங்கே காட்டில் வசித்து வந்த அத்திருடனின் 'பெருமை' நாடெங்கும் பரவியிருந்தது. அதனால் யாருமே தக்க துணையில்லாமல் காட்டுக்குள் போகத் துணிவதில்லை.

ஒரு சமயம் பல நாட்களாகவே காட்டிற்குள் யாரும் வரவில்லை; வந்து திருடனிடம் மாட்டிக் கொள்ளவில்லை. திருடனின் குடும்பம் சில நாட்கள் பட்டினியாகவே கிடந்தது. கடைசியில் திருடனின் மனைவி தன் குழந்தைகளையும் அழைத்துக்

கொண்டு நாட்டிலே பிச்சை எடுத்து உணவு சேர்க்கக் கிளம்பினுள். அந்தக் குழந்தைகள் ஐந்தும் அறுதல் பழசான செருப்புகளும் ஆடைகளும் அணிந்திருந்தன. ஆனுல் ஒவ்வொன்றின் கையிலும் ஒரு பெரிய பையைக் கொடுத்திருந்தாள் தாய்க்காரி. அந்தப் பைகள் ஐந்தும் நிறையும்படிப் பிச்சை எடுத்து உணவு கொண்டு வந்து விடுவதாக அவள் உத்தேசம்.

ஐந்து பைகளும் நிரம்பிவிடும் என்பதிலும் சந்தேகமில்லை. ஏனென்ருல், திருடனின் மனைவி பிச்சை என்று கேட்டால், இல்லை என்று சொல்ல அந்தப் பக்கத்தில் யாருக்குமே தைரியம் வராது. அவளிடம் ஜனங்களுக்கு அவ்வளவு பயம். இரவில் அவள் வந்து வீட்டிலோ, கொட்டகையிலோ தீ வைத்து விட்டால் என்ன செய்வது என்று பயம். அவளையும் அவள் குழந்தைகளையும் மனிதர்களாகவே ஜனங்கள் மதிப்பதில்லை. ஓநாய்கள் என்றே மதித்தார்கள் ; ஓநாய்களையும்விட மோசமானவர்கள் என்றே மதித்தார்கள். ஒரே வீச்சில் அவர்களை வெட்டி வீழ்த்தி விட்டால் தேவலை என்றுதான் அவர்களுக்கு ஆசை. ஆனுல், அப்படிச் செய்ய யாருக்கும் தைரியம் வரவில்லை. அவளை வெட்டி விடலாம்—ஆனுல் காட்டிலே இருந்தானே அவள் கணவன், எதற்கும் அஞ்சாதவன், சூரன், பயங்கரசித்தம் படைத்தவன், அவன் வந்து பயங்கர வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவானே என்று எண்ணி பயந்தார்கள்.

திருடனின் மனைவியும் அவள் குழந்தைகளும் விடு விடாகப் புகுந்து பிச்சை எடுத்துக்கொண்டே வந்தார்கள். கடைசியில் ஊவிட் மாளிகையை அடைந்

தார்கள். அந்தக் காலத்தில் ஊவிட் மாளிகை மத குருமார்களின் மடமாக இருந்தது. மடத்தின் வெளிக் கதவு மணியை அசைத்துவிட்டுத் திருடனின் மனைவி பிச்சை கேட்டாள்—அவள் குழந்தைகளும் உணவு கேட்டுக் குரல் கொடுத்தன. வாசற்காப்போன் திட்டி வாசலைத் திறந்து ஆறு ரொட்டித் துண்டுகளை அவளி டம் அளித்தான்—அவளுக்கு ஒன்று : அவளுடைய ஐந்து குழந்தைகளுக்கும் ஆளுக்கு ஒவ்வொன்று. இதை அவள் வாங்கிப் பையில் அடைத்துக்கொண்டு நிற்கும்போது அவளுடைய குழந்தைகள் ஐந்தும் அங் கும் இங்குமாக ஓடி ஆடித் திரிந்துகொண்டிருந்தன. அவள் ரொட்டித் துண்டுகளை பத்திரப்படுத்திவிட்டுத் திரும்ப யத்தனிக்கும் சமயம் அவளுடைய கடைசிக் குழந்தை வந்து அவள் காலண்டை நின்றுகொண்டு அவள் மேலங்கியைப் பிடித்து இழுத்தது. அதற்கு "இங்கே வந்து பாரேன் - விசேஷம் இருக்கிறது" என்று அர்த்தம் என்பது அவளுக்குத் தெரியும். அவள் தன் குழந்தையைப் பின்பற்றினாள்.

மடத்தைச் சுற்றி ஓர் உயர்ந்த சுவர் எழுப்பப்பட் டிருந்தது. உள்ளே என்ன இருந்தது என்று வெளியே தெரியாது. சுவரிலே ஒரு மூலையில் ஒரு சிறிய கதவு இருந்தது — அச்சமயம் அந் தக் கதவு திறந்திருந்தது என்பதை அச் சிறுவன் கண்டுவிட்டான். இதை அறிவுறுத்தவே அவன் தன் தாயாரின் மேலங்கியைப் பிடித்து இழுத் தான். திறந்த கதவு வழியாக நுழைவது திருடனின் மனைவியின் பழக்கம்—அவள் யாருடைய அனு மதியையும் எதிர் பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை.

அந்த வாசல் வழியாகத் தன் குழந்தைகள் பின்தொடர அவள் உள்ளே புகுந்தாள்.

அந்த நாளில் ஊவிட் மடத்தின் தலைமை அப்பட் பதவி வகித்தவருக்கு குரு ஹான்ஸ் என்று பெயர். அவருக்கு தோட்டக் கலையிலும் மூலிகை புல்பூண்டு மலர்களிலும் அபாரமான பிரியம் உண்டு. மடத்துத் தோட்டத்தில் ஒரு மூலையில் அவர் வெகு அற்புதமான பல வித மூலிகைச் செடிகளையும், மலர்ச் செடிகளையும் வைத்துப் பயிராக்கி யிருந்தார். சிறிய தோட்டம் தான் அது. ஆனால் அதிலேயிருந்த செடி கொடிகளையும் புல் பூண்டுகளையும் பல பிரதேசங்களிலிருந்தும், வெகுவாகச் சிரமப்பட்டுசேர்த்து கொண்டுவந்து வைத்து வளர்த்திருந்தார். திறந்திருந்த வாசல் வழியாக இந்தத்தோட்டத்திற்குள்தான் வந்தார்கள் திருடனின் மனைவியும், அவள் குழந்தைகளும்.

இந்த அழகான சிறு தோட்டத்தைக் கண்டு திருடனின் மனைவி முதலில் ஆச்சரியமடைந்து சில விநாடிகள் ஸ்தம்பித்து அப்படியே நின்று விட்டாள். காலம் நடு வஸந்த காலம். செடிகளும் கொடிகளும் பசுமையாக இருந்தன. சிவப்பும், நீலமும், மஞ்சளுமாக ஆங்காங்கே விதவிதமான மலர்கள் மலர்ந்து மனசையும் கண்ணையும் ஒருங்கே மயக்கின. தோட்டத்தைக்கண்ட விநாடி முதலே திருடனின் மனைவி தன் மனசைப் பறிகொடுத்து விட்டாள்—திருப்தியும் மகிழ்ச்சியும் அவள் முகத்திலே மலர்ந்தன. பாத்திகளுக்கிடையே வளைந்து வளைந்து செல்லும் பாதை வழியாக நாலா பக்கமும் பார்த்துக்கொண்டே நடக்கலானாள்.

மடத்தைச் சேர்ந்த சிஷ்யர்களில் ஒருவன் தோட்

டத்தில் களைபிடுங்கிக்கொண்டிருந்தான். தோட்டத்துக் கதவைத் திறந்து வைத்திருந்தவன் அவன்தான். தான் பிடுங்கிய விழலை வெளியே எறிவதற்காகவே அவன் அந்தக் கதவைத் திறந்து வைத்திருந்தான். திருடனின் மனைவியும் அவள் குழந்தைகளும் அக்கதவு வழியாகத் தோட்டத்துக்குள் வந்ததை அவன் முதலில் கவனிக்கவில்லை. ஆனால் கவனித்தவுடன் எழுந்து ஓடிவந்து "வெளியே போ, வெளியே போ" என்று கத்தினான். ஆனால் அவன் அப்படிக் கத்தியதையோ, அவன் வந்ததையோ கவனிக்காதவள்போலவே திருடனின் மனைவி - பிச்சைக்காரி அவள் - தோட்டத்தின் அழகுகளைப் பார்த்துக்கொண்டே மேலே நடந்தாள். ஒரு நிமிஷம் வெள்ளை அரும்புகளின் பாத்தி ஓரமாக நின்று தலையைச் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். அடுத்த நிமிஷம் நிமிர்ந்து மடாலயத்தின் சுவரில் படர்ந்து ஏறிய புல்லுருவியைக் கவனித்தாள். மடத்தின் சிஷ்யனைக் கவனிக்கவேயில்லை. அவளுக்குக் காது கேட்கவில்லை என்று எண்ணினான் அந்தச் சிஷ்யன்—அல்லது தான் சொன்னது அவளுக்குப் புரியவில்லையோ என்று யோசித்தான். கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போய் அவளை வெளியே விட்டுவிட்டு வருவது என்று எண்ணியவனாக அவன் அவளை அணுகினான். ஆனால் அந்த சமயம் அவள் நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையின் முன் சோர்ந்துபோய்ப் பின்வாங்கினான் சிஷ்யன். இவ்வளவு நேரம் முதுகில் இருந்த மூட்டையின் கனத்தால் குனிந்து கூனியபடியே நடந்துகொண்டு வந்த அவள் நேராக நிமிர்ந்து நின்று சொன்னாள்: "நான் நீயிங்கே

காட்டுத் திருடனின் மனைவி. உனக்குத் தைரியமுண்டானால் நீ என் மேல் கை வைக்கலாம்" என்றாள்.

அவள் இதைச் சொன்ன குரல் எப்படி யிருந்தது தெரியுமா? டென்மார்க் தேசத்து ராணியே அவ்வளவு பெருமையுடன், தான் யார் என்பதைச் சொல்லியிருக்கமாட்டாள். அதுமட்டுமா? தான் யார் என்று அறிந்தவுடன் அந்த மடத்து சிஷ்யன் அலறிக்கொண்டு ஓடிப்போய் விடுவான் என்று அவள் எதிர்பார்த்தாள் போலும். அவள் யார் என்று அறிந்த பின்னரும் அந்தச் சிஷ்யன் தயங்கவில்லை—அவளைக் கையைப்பிடித்து வெளியே இழுத்துக்கொண்டுபோய் விட்டு விடுவது என்கிற எண்ணத்தை விட்டு விட்டானே தவிர, அவளை வெளியே போகச் சொல்வதை நிறுத்தவில்லை.

"இதோ பார். நீ கியிங்கே காட்டுத் திருடனின் மனைவியாக இருக்கலாம். ஆனால் இது மதகுருமாரும் அவர்களுடைய சிஷ்யர்களும் வசிக்கும் இடம். இங்கு ஸ்திரிகள் வரக்கூடாது. நீ போய்விடு. நீ இப்பொழுதே போகாவிட்டால் கதவைத் திறந்து வைத்திருந்த குற்றத்துக்காக குருமார் என்னிடம் கோபித்துக்கொள்வார்கள். அந்தக் குற்றத்துக்காக என்னை மடத்திலிருந்து வெளியே துரத்தினாலும் துரத்திவிடுவார்கள்" என்றான் மடத்துச் சிஷ்யன்.

இந்த மாதிரிப் பேச்செல்லாம் திருடனின் மனைவி காதில் ஏறவேயில்லை. அவள் தன் பாட்டில் பாத்திகளுக்கிடையே உல்லாஸமாக, உலாத்திக்கொண்டிருந்தாள். ஹிஸ்ஸம் பாத்தியண்டை நின்றாள் சிறிது நேரம்—நீல ஹிஸ்ஸம் புஷ்பங்களைப் பார்த்துக்கொண்டு. அடுத்த நிமிஷம் ஆரஞ்சு நிறமான காலைமங்

தாரைப் புஷ்பங்களை நோக்கித் தன் கண்களைத் திருப்பினுள்.

சிஷ்யனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கடைசியில் அவளை வெளியே துரத்த உதவி கொண்டுவரவேண்டி மடத்துக்குள் ஓடினுன். திடகாத்திரமான இரண்டு குருமாருடன் வெளியே வந்தான். அவர்களைக் கண்டவுடனேயே அவர்களுடைய உத்தேசம் திருடனின் மனைவிக்குத்தெரிந்துவிட்டது. கால்களை ஊன்றிப் பாதையில் நிமிர்ந்து நின்றுகொண்டு உரத்த குரலில் பேச ஆரம்பித்தாள். தோட்டத்தில் தன்னை இஷ்டப்படித் திரிய விடாவிட்டால், அந்த மடத்தையே அழித்து விடுவேன், கொளுத்தி விடுவேன், தீர்த்து விடுவேன் என்று கூப்பாடு போட்டாள். தான் தோட்டத்தைப் பார்வையிடுவதில் அவர்களுக்கு என்ன நஷ்டம் என்ருள். அவள் பயமுறுத்தல்களுக்கெல்லாம் அஞ்சுவதாக இல்லை மத குருமார். அவளை அலக்காகத் தூக்கி வெளியே கொண்டுபோய்ப்போட்டு விடுவது என்ற உத்தேசத்துடன் அவளை அணுகினுர்கள்.

ஆனல் அவர்கள் தன்னை அணுகும் வரையில் காத்திருக்கத் தயாராக இல்லை திருடனின் மனைவி. ஒரு பயங்கரமான கூச்சலுடன் திடீரென்று கைகளையும் கால்களையும் விசிறிக்கொண்டு அவர்கள்மேல் பாய்ந்து வந்தாள் அவள். அடித்தாள்; குத்தினுள்; உதைத்தாள்; கூச்சலிட்டாள். அவளுடைய ஐந்து குழந்தைகளும் சந்தோஷ ஆரவாரத்துடன் வீரப் போர்புரியத் தயாராக வந்து கலந்துகொண்டன. மத குருமார் இருவரும், சிஷ்யன் ஒருவனும் அதி சீக்கிரமே

தோல்வியை ஒப்புக்கொண்டு புது ஆள்பலம் கொண்டு வரப் பின்விட்டனர்.

மடத்துக்குள் செல்லும் பாதையிலே அவர்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கையில் எதிர்ப்பட்டார் மடாலயத்தின் அதிபதி அப்பட் ஹான்ஸ். தோட்டத்தி லிருந்து எழுந்த கூச்சல் அவர் காதுவரை எட்டி, என்ன விஷயம் என்று விசாரிக்க அவர் அதிவேகமாக விரை ந்துகொண்டிருந்தார். கியிங்கே காட்டுத் திருடனின் மனைவி தோட்டத்தில் புகுந்து விட்டதாகவும், மூவரும் சேர்ந்தும் அவளை அப்புறப்படுத்தமுடிய வில்லை என்றும், துணைக்கு இன்னும் சிலரை அழைத்து வரப் போய்க் கொண்டிருப்பதாகவும் அவரிடம் தெரி வித்தனர் மதகுருமாரும் சிஷ்யனும்.

உதவிக்கு ஆள் கூப்பிடவேண்டாம் என்றார் அப் பட் ஹான்ஸ். அவளைப் பலவந்தமாக அப்புறப்படுத்த முயன்றதே தவறு என்றார் அவர். இரண்டு மதகுரு மார்களையும் 'போய் உங்கள் வேலையைக் கவனியுங்கள்' என்று கடிந்து அனுப்பிவிட்டு, அந்தக் கிழ அப்பட் சிஷ்யப் பிள்ளையை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குள் வந்தார்.

திருடனின் மனைவி இன்னும் தோட்டத்திலே தான் இருந்தாள். பாத்தி பாத்தியாகப் பார்த்துக் கொண்டே நின்றாள். அவளை ஆச்சரியத்துடனும் சற்று மகிழ்ச்சியுடனுமே கவனித்தார் அப்பட் ஹான்ஸ். அவள் அந்தமாதிரித் தோட்டத்தை அதற்குமுன் எங் கேயும் கண்டிருக்கமுடியாது என்பது என்னவோ நிச்சயம். அதுபற்றி அப்பட் ஹான்ஸுக்கு சந்தேகமே இல்லை. ஆனால் ஏதோ தினம் தனக்குப்பழக்கமான காரி

யத்தைச் செய்வதுபோல் அவள் பாத்தி பாத்தியாகப் பார்த்துக்கொண்டே வந்தது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. பழைய நண்பர்களைப்பார்ப்பதுபோலஅவள் சில செடிகளைப் பார்த்தாள் : சில மலர்களைப் பார்த்து தலையை ஆட்டினுள்: சில செடிகளைத் தடவிக் கொடுத்தாள். அவள் முகத்திலே படர்ந்திருந்த ஆனந்தத்தைக் காணக்காண அப்பட் ஹான்ஸுக்கு இன்பமாக இருந்தது.

மதகுருமார்—அதுவும் மடாதிபதிகள்—அநித்திய மான வஸ்துக்களின்மேல் ஆசை வைக்கக்கூடாதுதான் எனினும் நமது மதகுரு அப்பட் ஹான்ஸ் தனதுதோட்டத்தின்பேரில் அளவுகடந்த ஆசை வைத்திருந்தார். எவ்வளவோ சிரமப்பட்டுத் தேடிப்பிடித்துத் தன் கையாலேயே நட்டுவைத்து, தண்ணீர் ஊத்தி வளர்த்த செடிகள் பல இருந்தன அந்தத் தோட்டத்திலே. தன்னைப்போலவே அவளும் அந்த தோட்டத்தின் அழகிலே ஈடுபட்டிருப்பதைக் கண்டு அப்பட் ஹான்ஸ் சந்தோஷப்பட்டார். அவளைப் பார்த்தால் பயங்கரமாக, காட்டுமிராண்டிபோலத்தான் இருந்தது. ஆனுல் தன் தோட்டத்தின் அழகைக் காண்பதற்காக அவள் மூன்று பேருடன் தனியாகப் போராடி ஜயித்தாள் என்று எண்ணும்போது அப்பட் ஹான்ஸுக்குத் தன் தோட்டத்தைப்பற்றி சற்றுப் பெருமையாகவே இருந்தது. அவர் அவளை அணுகித் தாழ்மையுடனேயே கேட்டார்: "இந்தத் தோட்டம் உனக்கு பிடித்திருக்கிறதா?" என்று.

திருடனின் மனைவி எது வந்தாலும் எதிர்ப்பது என்ற திடசித்தத்துடன் திரும்பினுள். ஏதோ

பேச்சுக்கொடுத்து ஏமாற்றித் தன்னைக் குண்டுக்கட்டாக வெளியேற்றி விடுவார்கள் என்று எதிர்பார்ப்பவள்போல அவள் தயாராகத் திரும்பினாள். ஆனால் அப்பட் ஹான்ஸின் தலைமயிர் தூயவெள்ளையாக இருந்தது. அவர் குரலைப்போலவே அவர் தேகமும் மெலிந்திருந்தது. அவள் அமைதியாகவே பதில் அளித்தாள்.

"இதைவிட அழகான தோட்டத்தை நான் கண்டதில்லை என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால்..."

"ஆனால் என்ன?" என்றார் அப்பட் ஹான்ஸ்.

"ஆனால் இதைவிட அழகான தோட்டம் ஒன்றை நான் பார்த்திருக்கிறேன். அதனுடன் இதை ஒப்பிடுவதற்கேயில்லை" என்றாள் திருடனின் மனைவி சாந்தமாக.

அப்பட் ஹான்ஸ் இந்தமாதிரியான பதிலை எதிர்பார்க்கவில்லை. தன்னுடையதைவிட அழகான தோட்டத்தைப் பார்த்திருப்பதாக அவள் சொன்னவுடனே அவருடைய முகம் சற்றே சிவந்தது. உலகத்தையே வெறுக்கத் துணிந்துவிட்ட-அவர் உள்ளம் துடித்தது. என்ன பதில் அளிப்பது என்று அறியாமல் சற்று மௌனமாக நின்றார். அவர் அண்டையில் நின்ற சிஷ்யன் சற்றுப் பதட்டமாக, அதட்டலாகவே சொன்னான்: "இது யார் தெரியுமா? இம்மடத்தின் அதிபதியான அப்பட் ஹான்ஸாக்கும் இவர். எவ்வளவோ சிரமப்பட்டு நாடெல்லாம் தேடித்திரிந்து மூலிகைகளையும் மலர்களையும் கொடிகளையும் செடிகளையும் இங்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். பைத்தியக்காரி நீ! உனக்கு என்ன தெரியும்? இந்தத் தோட்டத்தைப்போன்ற தோட்டம் இந்த தேசத்திலேயே கிடையாது, தெரி

யுமா? நீ ஏதோ காட்டிலே வசிப்பவள். எந்தவிதமான தோட்டத்தையுமே கண்டறியாதவள். இதைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல உனக்கு என்ன தெரியும்?"

"உன்னையோ உன் மடத்து அதிபதியையோ தாழ்மைப்படுத்த நான் விரும்பவில்லை" என்று பதில் அளித்தாள் திருடனின் மனைவி. "ஆனால் எனக்குத் தெரியும் ஒரு தோட்டம். இந்தக் கண்களால் அதைப் பார்த்திருக்கிறேன். அந்தத் தோட்டத்தை மட்டும் நீங்கள் பார்ப்பீர்களானால் இது என்ன தோட்டம் என்று நீங்களே வெட்கப்பட்டு இதிலுள்ள செடிகொடிகளை எல்லாம் பிடுங்கி எறிந்துவிடுவீர்கள்" என்றாள்.

மடத்துத் தோட்டத்தைப்பற்றி அப்பட் ஹான்ஸைப்போலவே அந்தச் சிஷ்யனும் பெருமை கொண்டவன். காட்டில் வசிக்கும் ஒரு காட்டுமிராண்டி இப்படிச் சொன்னதைக்கேட்டு அவன் நகைத்தான். அதே சமயம் அவனுக்குக் கோபமும் அளவுகடந்து வந்தது.

"ஆமாம்! உங்க காட்டிலே இதைவிட அழகான தோட்டம் இருக்கு! இருக்கு! போடி போ, பைத்தியக்காரி. கடவுளின்மேல் ஆணையாகச் சொல்கிறேன்—நீ ஒரு தோட்டத்தைப் பார்ப்பது இதுவே முதல்தடவை என்று நான் நினைக்கிறேன்" என்றான் அவன்.

திருடனின் மனைவிக்குக் கோபம் வந்தது — தன் வார்த்தைகளைப் பொய் என்று ஒருவன் சொல்லுகிறானே என்று. "உண்மைதான்" என்றாள் கோபமாக. "நான் இன்றுவரை மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு தோட்டத்துக்குள் போய் பார்த்ததில்லை என்பது உண்மையே. ஆனால் தோட்டம் என்றால்......நீங்கள் புனிதமான வாழ்க்கை நடத்துபவர்கள். மதகுருக்கள்,

அவர்களின் சிஷ்யர்கள்—நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? பிரதி வருஷமும் கிறிஸ்துமஸுக்கு முந்திய இரவு வஸந்தகாலம் போல கியிங்கே வனம் பூத்துக் குலுங்குகிறது என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா, பார்த்ததும் இல்லையா? நடு மாரிக்காலத்தில் நமது கிறிஸ்துவின் பிறப்பின் ஞாபகார்த்தமாக, கிறிஸ்து அர்ப்பணமாக வஸந்தகாலம் தோன்றி மரமும் செடியும் கொடியும் பூத்துக் குலுங்கும் என்று நீங்கள் அறிந்ததில்லையா? காட்டில் வசிக்கும் நாங்கள் பிரதி வருஷமும் இந்த விந்தையைக் கண்டிருக்கிறோம். என்ன அற்புதமான புஷ்பங்கள்! என்ன அழகான வர்ணங்கள்! எவ்வளவு இன்பகரமான வர்ண விஸ்தாரங்கள்! அடாடா! நாவால் சொல்லி மாளாது. கை நீட்டி அந்தப் புஷ்பங்களில் ஒன்றைப் பறிக்கவும் மனசு வராதே! அவ்வளவு அழகு!"

மதகுருவின் சிஷ்யன் ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். ஆனால் 'ஒன்றும் சொல்லாதே, பேசாதிரு' என்று அப்பட் ஹான்ஸ் கையைக் காட்டினர். கியிங்கே வனம் நடுமாரியில் கிருஸ்துமஸ் தினத்தன்று கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்காக வஸந்த ஆடை தரிக்கிறது என்கிற கதையை அவர் இளவயசிலிருந்தே கேள்விப்பட்டதுண்டு. அந்த சமயத்தில் வனத்தைப் பார்க்கவேண்டுமென்று அவர் பலதடவைகளில் ஆசைப்பட்டதுமுண்டு. ஆனல் காண நேர்ந்ததில்லை. இப்பொழுது அதைப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்போல் இருந்தது. கிறிஸ்துமஸ் தினத்தன்று தன்னை அழைத்துப்போய் அந்த விந்தையைக் காட்டவேண்டும் என்று திருடனின் மனைவியிடம் அவர்

வேண்டிக் கேட்டுக்கொண்டார். அவளுடைய குழந்தைகளில் ஒருவனை வழி காட்டுவதற்கு அனுப்பினால் வருவதாகச் சொன்னார். தனியாக வருவதாகவும், தன்னால் அவளுடைய குடும்பத்துக்கு எவ்விதமான கெடுதியும் வராது என்றும் சொன்னார். கெடுதிவராது என்பது மட்டுமல்ல; திருடனுக்கும் அவன் குடும்பத்துக்கும் தன்னலான உதவி செய்வதாகவும் வாக்களித்தார்.

முதலில் திருடனின் மனைவி தயங்கினாள். அப்பட் ஹான்ஸ் மூலமாகத் தனது கணவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தாள். காட்டில் தங்களுடைய வாசஸ்தலத்தை அறிந்துகொண்டு அப்பட் ஹான்ஸ் காட்டிக்கொடுத்து விட்டாரானால்...! ஆனால் தன்னுடைய கிறிஸ்துமஸ் தோட்டத்தை அவருக்குக் காட்டவேண்டுமென்ற விருப்பம் மேலோங்கி நின்றது. கடைசியில் ஒப்புக் கொண்டாள். நிபந்தனைகளும் விதித்தாள்.

"நீங்கள் ஒருவரை மாத்திரமே உடன் அழைத்து வரலாம். வேறு யாரையும் அழைத்துவரக்கூடாது. புனிதமான மதகுருவாகிய நீங்கள் எங்களை ஏமாற்றி அதிகாரிகளிடம் காட்டிக் கொடுப்பதில்லை என்று வாக்களிக்க வேண்டும். எங்கள் வாசஸ்தலத்தையும் அதை அணுகும் வழியையும் காட்டிக் கொடுக்கக் கூடாது."

அப்பட் ஹான்ஸ் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தார். திருடனின் மனைவி கடைசித் தடவையாகத் தோட்டத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டுக் கிளம்பினாள். தாங்கள் இப்படிக் கிறிஸ்துமஸ்

தினத்துக்கு ஏற்பாடு செய்திருப்பதை ஒருவரிடமும் சொல்லக்கூடாது என்று தன் சிஷ்யனுக்குக் கட்டளையிட்டார். வெளியில் தெரிந்துவிட்டால் காரியம் நடக்காது. கிழவனுகிய அவரைத் தனியே அனுப்ப, அதுவும் கியிங்கே காட்டில் திருடனின் குகைக்கு அனுப்ப, மடத்தைச் சேர்ந்தவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்று பயந்தார் கிழ மதகுரு அப்பட் ஹான்ஸ்.

இந்த விஷயம் பற்றி அவராகவே யாருடனும் பேசுவதும் இல்லை. பேசியும் இருக்கமாட்டார். ஆனுல் ஒருநாள் லுண்டு நகரில் இருந்து ஆர்ச்பிஷப்பு அப்ஸலன் வந்திருந்தார். ஊவிட் மடத்தில் ஓர் இரவு தங்கினுர். அப்பட் ஹான்ஸ் பெருமையுடன் சாயங்கால வேளையில் தனதுதோட்டத்தை ஆர்ச்பிஷப்பு அப்ஸலனுக்குக் காட்டிக்கொண்டிருந்தார். அன்று அவருக்கு என்னவோ ஞாபகம் வந்தது. திருடனின் மனைவி வந்து சொல்லிப்போனது ஞாபகம் வந்தது. முன் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த அதே சிஷ்யனே இன்றும் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தான். அப்பட் ஹான்ஸ் அந்த விஷயத்தை ஆர்ச்சு பிஷப்பிடம் சொல்வது அந்த சிஷ்யன் காதில் விழுந்தது.

முதலில் கியிங்கே காட்டில் வசித்துவந்த திருடனைப்பற்றி அவர் பேச்செடுத்தார். அவன் பிரஷ்டம் செய்யப்பட்டு எவ்வளவோ வருஷங்களாகி விட்டன. நகரைவிட்டுத் துரத்தியதால் அவன்மேரில் ஏற்பட்டிருந்த அபக்கியாதியை நீக்கி அவனை மறுபடியும் மனிதர்களிடையே மனிதனுக நடமாட அனுமதிக்கவேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறினுர் அப்பட்

ஹான்ஸ். "ஆர்ச்பிஷப்பு மன்னிப்புக் கடிதம் கொடுத்து விட்டால் போதும். அவன் - நகரப் பிரஷ்டம் செய்யப்பட்டு இவ்வளவு நாள் காட்டில் கஷ்டப்பட்ட அத்திருடன் - மீண்டும் மனிதனுகிவிடுவான். அவனைத் தனி மனிதனுக்கிக் காட்டுக்கு அனுப்பியது தவறு என்ருகிவிட்டது. அவன் பிள்ளைகள் அவனைவிடச் சூரர்களாக இருக்கிருர்கள். ஒரு திருடன் இருந்தது போதாது என்று இப்போது ஐந்து பக்காத் திருடர்கள் ஆகிவிட்டார்கள்" என்ருர் அப்பட் ஹான்ஸ்.

அயோக்கியனை மீண்டும் யோக்கியர்களிடையே நடமாட விடுவது தவறு என்ருர் ஆர்ச் பிஷப்பு அப்ஸலன். அவன் காட்டிலே வசிப்பதுதான் உலகத்துக்கே க்ஷேமம் என்ருர் அவர்.

இதைக்கேட்ட அப்பட் ஹான்ஸ் அந்தத் திருடனை மன்னிக்கத் தான் வேண்டும் என்று உத்ஸாகத்துடன், ஆர்வத்துடன் பேசத் தொடங்கிவிட்டார். பேச்சு மும்முரத்தில் அவர் கியிங்கே காட்டைப்பற்றியும், அதில் ஒவ்வொரு மாரியிலும் கிறிஸ்துமஸ் சமயத்தில் வஸந்தம் விளையாடுகிறது கிறிஸ்துவைக் கௌரவிப்பதற்காக என்றும், அந்தக் காட்சியைத் திருடன் என்று ஜனங்களால் பிரஷ்டம் செய்யப்பட்ட அவன் பிரதி வருஷமும் காண்கிருன் என்றும் சொன்னுர். "அவன் திருடன் என்று நம்மால் ஒதுக்கப்பட்டவன். கடவுளின் விந்தைகள், மாயங்கள், பெருமைகள் நமக்குப் புலப்படுவதற்கு அதிகமாகவே அவனுக்குப் புலப்படுகின்றன என்ருல் நம்மைவிட அவன் தேவலை என்று ஏற்படவில்லையா? கடவுள் அவனை ஒதுக்கவில்லை என்றும் ஏற்படவில்லையா?" என்ருர்.

இதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று ஆர்ச் பிஷப்பு நன்கு அறிந்திருந்தார். சற்றும் தயங்காமலே பதில் அளித்தார். " அப்பட் ஹான்ஸ், இது ஒன்றுமட்டும் நான் உங்களிடம் சத்தியமாகச் சொல்லுகிறேன். ஏதோ கிறிஸ்துமஸ் சமயத்தில் வஸந்த மலர்கள் அத்திருடன் குகையில் கிடக்கின்றன என்கிறீரே, அந்த மலரில் ஒன்றைக் கொண்டுவந்து என்னிடம் காட்டும். அன்றே அந்தத் திருடனையும் அவன் குடும்பத்தையும் மன்னித்து திரும்பவும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளச் செய்கிறேன்."

இதைச் சொல்லிவிட்டு ஆர்ச் பிஷப்பு லேசாகச் சிரித்தார்.

இத்தனையும் கேட்டுக்கொண்டிருந்த சிஷ்யனுக்குத் தெரிந்துவிட்டது—இந்தக் கிறிஸ்துமஸ் தோட்டக் கதையை ஆர்ச் பிஷப்பும் தன்னைப்போலவே நம்பவில்லை என்று. ஆனால் அப்பட் ஹான்ஸுக்கு இம்மாதிரி சிந்தனைகள், சந்தேகங்கள் ஒன்றும் இல்லை. அந்த விந்தையைப் பார்க்கத்தான் போகிறோம் என்று நிச்சயமிருந்தது. ஆகவே அவர் ஆர்ச் பிஷப்புக்கு வந்தனம் சொன்னார், அத்திருடன் மேல் பச்சாத்தாபம் கொள்வதாக வாக்களித்ததற்காக. கூடிய சீக்கிரமே ஆர்ச்பிஷப்பு கேட்ட அந்த மலரைக் கொண்டுவந்து தருவதாகவும் சொன்னார்.

கிறிஸ்துமஸுக்கு முந்திய தினம். கியிங்கே வனத்துக்குக் கிளம்பிவிட்டார் அப்பட் ஹான்ஸ். திருடனின் மனைவி தான் சொல்லிவிட்டு வந்ததை மறந்துவிடாமல் தன்னுடைய குழந்தைகளில் ஒருவனை அனுப்பி யிருந்தாள் அவருக்கு வழிகாட்ட. அன்று தோட்டத்தில் களைபிடுங்கிக்கொண்டிருந்த அதே சிஷ்யப் பிள்ளை பின் தொடர திருடனின் வாண்டுப் பயல் முன்னே வழி காட்டிக்கொண்டு ஓட அப்பட் ஹான்ஸ் கியிங்கே வனத்துக்குள் பிரவேசித்தார்.

இந்தப் பிரயாணத்தை மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர் அப்பட் ஹான்ஸ். திருடர்களின் கண்ணுக்குப் புலனாகித் தன்னைப்போன்ற புனிதமான மடாதிபதிகளுக்குக்கூடப் புலனாகாத அந்தத் தெய்வீகமான வஸந்தக் காட்சியைக் காண அவர் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தார். அவருடன் வந்த சிஷ்யனுக்குத் தான் சற்றுப் பயமாக இருந்தது. அவனுக்குத் தன்னுடைய குருவிடம் அபாரமான பிரேமை. அது காரணமாகத் தான் அவன் குருவுக்குக் காவலாக வந்திருந்தான். வேறு யாருடனும் அவரைச் சேர்த்தனுப்ப அவனுக்குத் தைரியமில்லை: என்ன நேர்ந்துவிடுமோ என்று பயம். ஆனால் அவனுக்கு உள்ளூற ஒரு நிச்சயம். கியிங்கே காடு மாரிக்காலத்தில், கிறிஸ்துமஸுக்கு முந்திய இரவு வஸந்தகோலம் பூணுகிறது என்பது கட்டுக்கதை என்றுதான் அவன் நம்பினான். திருடனின் மனைவி ஏதோ கதைத்தாள், அது தவிர வேறு ஒன்றுமில்லை என்றே அவன் எண்ணினான். அப்

பட் ஹான்ஸைப் பிடித்துக் கொல்லத் திருடனின் மனைவி செய்த சதியாகவும் இருக்கலாமோ அது என்றுகூடச் சில சமயம் அவனுக்குத் தோன்றிற்று.

ஒபிங்கே காட்டுக்குப் போகும் வழியெல்லாம் வசித்த ஜனங்கள் கிறிஸ்துமஸ் நாளை எதிர்பார்த்துக் குதூகலமாக இருந்தார்கள். முந்திய கிறிஸ்துமஸ் நாட்களைப்போலவே இந்தக் கிறிஸ்துமஸையும் கொண்டாட ஒவ்வொரு வீட்டிலும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்திய தினமாதலால் ஏற்பாடுகளெல்லாம் முடிவடையும் தருணத்திலிருந்தன. பெரிய பெரிய அண்டாக்களில் ஸ்நானத்திற்கு என்று வெந்நீர் தயாராகிக்கொண்டிருந்தது. ரொட்டியும் மற்றும் ரக ரகமான தின்பண்டங்களும் தாராளமாகத் தயாராகியிருந்தன: உக்கிராணங்களிலிருந்து சாப்பாட்டு அறைக்குச் சென்று கொண்டிருந்தன. வீடுகளில் வாசலிலும் தரையிலும் வைக்கோல் பரப்பியிருந்தது. வழிநெடுக இருந்த சிறு மாதாகோயில்களெல்லாம் கிறிஸ்துமஸை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன: உத்ஸவ காலத்தில் போல உள்ளேயும் வெளியேயும் அவை அலங்கரிக்கப்பட்டிருந்தன. கிறிஸ்துமஸைவிடப் பெரிய உத்ஸவம் ஏது? இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டே மனசில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் சவாரி செய்தார் அப்பட் ஹான்ஸ். பாஸ்யோ மடத்திற்குப் போகும் பாதையில் ஒரே கூட்டமாக இருந்தது அன்று. அந்த மடத்தில் ஏழை எளியவர்களுக்குச் சாப்பாடு போடுவார்கள்; தவிரப் பணக்காரர்கள் பலர் சேர்ந்து தான தருமங்கள் செய்வார்கள்.

கிறிஸ்துமஸ் ஏற்பாடுகள் இப்படி ஆனந்தமாக நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க அப்பட் ஹான்ஸுக்கு ஆவல் அதிகரித்தது: உள்ளம் துடி துடித்தது. தான் அதுவரையில் கொண்டாடிய கிறிஸ்துமஸ் உத்ஸவங்களை எல்லாம்விட அதி அற்புத மான, அதி சிரேஷ்டமான கிறிஸ்துமஸ் உத்ஸவத்தைக் இங்கே காட்டில் திருடன் குடும்பத்துடன் கொண் டாடப் போகிறோம் என்ற ஞாபகம் அவரை மேலும் மேலும் வேகமாகத் தன் குதிரையைத் தட்டிவிடத் தூண்டியது. மற்றவர்கள் பலருக்கு - அதுவும் மடாலயத்தில் தன்னையும்விடப் பெரியவர்கள், மதிப்பு வாய்ந்தவர்களுக்குக்கூடக் கிடைக்காத ஒரு பாக்கியம் தனக்குக் கிடைக்க இருந்ததை எண்ண எண்ண அவ ருக்கு ஆனந்தமாக இருந்தது.

ஆனால் அவருடன் வந்த சிஷ்யப் பிள்ளைக்கோ அப்படியில்லை. போகப் போக அவன் மனம் துன்பத் தில் ஆழ்ந்தது. ஊரெல்லாம் வழக்கம்போல கிறிஸ்து மஸ் பண்டிகையைக் கொண்டாடுகிறார்களே. நமக்கு மட்டும் ஏன் இந்தத் தொல்லை என்று நினைத்தான் அவன். பிரயாணம் நல்லபடியாக முடிந்து அவர்கள் நல்லபடியாக மீண்டும் மடத்துக்குத் திரும்ப வேண்டுமே என்று அவன் கடவுளைப் பிரார்த்தித்தான். நாடு நகரம் கடந்து அவர்கள் காட்டுப் பிரதேசத்தை அடையும்போது அவனுடைய பயம் அளவுக்கு மீறி விட்டது. "திரும்பி விடலாமே, திரும்பிவிடலாமே" என்று அவன் அப்பட் ஹான்ஸிடம் அடிக்கடி கூறி னான். திருடனிடம் வலுவிலே தானாகவே போய்

மாட்டிக்கொள்ளலாமா? அது என்ன பைத்தியக்காரத் தனம்? என்று கேட்டான்.

தன் சிஷ்யப் பிள்ளையினுடைய வார்த்தைகளைக் காதில் வாங்காமலே அப்பட் ஹான்ஸ் மேலே போனார். ஜன சஞ்சாரமேயில்லாத பிரதேசத்தை அடைந்துவிட்டனர் அவர்கள். கல்லும் முள்ளும் நிறைந்த காட்டிற்குள்ளே ஒரு சிறு கொடி வழியில் தொடர்ந்து சென்றனர். சிற்றாறுகள் பலவற்றை அவற்றில் இறங்கியே கடக்கவேண்டியிருந்தது; வேறு பாலமோ துறையோ கிடையாது அங்கே. சமவெளியைக் கடந்து அவர்கள் சிறிது நேரத்திலே மலைச்சரிவை அடைந்தார்கள். காற்று சில்லென்று விசிறி அடித்தது. பனி பெய்துகொண்டிருந்தது. நடு மாரிக்காலம் ஆதலால் ஒரே குளிராக இருந்தது. போகும் வழியெல்லாம், மேலே போகப்போக பனிபெய்து உரைந்துபோயிருந்தது. சிரமமான காட்டு வழிதான்—நீண்ட வழியும் தான். செங்குத்தான சரிவிலே ஏறி, இறங்கிச் சென்றார்கள் அவர்கள். பல இடங்களில் ஏற முடியாமல் ஈரமும் பனியும் சகதியும் சேர்ந்து வழுக்கி வழுக்கிவிட்டது. வழி நெடுக முற்புதர்களும், அடர்ந்த செடி கொடிகளும் பின்னிக்கிடந்தன. இவற்றை எல்லாம் கடந்து அவர்கள் அஸ்தமன சமயத்துக்கு ஒரு மலைப் பாறையை அடைந்தார்கள். பாறை செங்குத்தாக உயர்ந்து வானளாவி நின்றது. அங்கு சுற்றிலும் வானோங்கி வளர்ந்திருந்த பைன்மரங்கள் காற்றிலே ஆடி அசைந்துகொண்டிருந்தன. மாரிக்காலமாதலால் ஒரு மரத்திலாவது ஒரு இலைகூடக் காணவில்லை. பசுமை என்பதே அச்சமயம் அப்பிரதேசத்தில் காண

வில்லை. பாறையிலே சற்றுத் தாழ்ந்த இடத்திலே பைன் மரச்சட்டங்களாலான கதவு ஒன்று தென்பட்டது. அதை நோக்கி ஓடினான் வழி காட்டிக்கொண்டு வந்த பையன்.

வந்து சேர்ந்துவிட்டோம் என்று அறிந்துகொண்டு அப்பட் ஹான்ஸ் குதிரையிலிருந்து இறங்கினார். பையன் கதவைத் திறந்தான். உள்ளே ஒரு சதுரமான அறைமாதிரி இருந்தது. அறைச் சுவர்கள் மலைப்பாறைகள்தான்—வெறும் பாறைகள். குளிர் தெரியாமல் இருப்பதற்காக அறை நடுவே ஒரு கணப்பு எரிந்து கொண்டிருந்தது. பெரிய பெரிய கட்டைகள் எரிந்து சாம்பலாகிக்கொண்டிருந்தன. திருடனின்மனைவி கணப்பண்டை உட்கார்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தாள். கோரைப்புல், வைக்கோல் முதலியவற்றைப் படுக்கையாகப் பரப்பிக்கொண்டு திருடனும் அவன் குழந்தைகளும் படுத்து உறங்கிக்கொண்டிருந்தனர்.

குதிரைகளின் காலடிச் சப்தமும், வெளிக்கதவு திறக்கும் சப்தமும் கேட்டதும் திருடனின் மனைவி கூவினாள்: "கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே கணப்பண்டை வாருங்கள். குதிரைகளையும் உள்ளேயே கொண்டுவந்து விடுங்கள்—இல்லாவிட்டால் வெளியே குளிரில் அவை விரைத்துப்போகும்."

திருடனின் குகைக்குள் அப்பட் ஹான்ஸ் தைரியமாகவே சென்றார். ஆனால் வாசற் கதவைத் தாண்டும்போது அவர் சிஷ்யனுக்குக் குலை நடுக்கம் கண்டுவிட்டது. எப்படியோ சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றான்.

"என்ன ஏழைமை! ஐயோ பாவம்! இவள் குழந்

தைகள்தான் இந்தக் குளிரினாலும் ஏழைமையினாலும் எவ்வளவு அவஸ்தைப்படுகின்றன! நாளை விடிந்தால் கிறிஸ்துமஸ் பண்டிகை. நாடெங்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் உத்ஸாகமாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவர்கள் வீட்டிலோ எவ்விதமான ஏற்பாடுகளையுமே காணோம். விருந்துண்ணுவதற்குக்கூட சாதாரண உணவுப் பண்டங்களையும் காணோமே! கிறிஸ்துமஸ் தினத்தன்று இவர்களுக்கு உண்ண உணவு கூடக் கிடையாதுபோலிருக்கிறதே! ஐயோ பாவம்! அந்தப் புனிதமான நன்னாளை எதிர்பார்த்து இவள் தன் குடிசையை அலம்பிச் சுத்தம்கூடச் செய்யவில்லையே! கிறிஸ்துமஸ் தினத்தன்றுகூட அவர்களுக்குச் சாப்பிடக் கிடைத்தது ஏதோ கஞ்சிதான்—அதுவும் அரை வயிறு அலம்பக்கூடப் போதுமானதாக இராது!" என்று யோசித்தார்.

ஆனால் திருடனின் மனைவி இதைப்பற்றி யெல்லாம் சிந்தித்ததாகவே தெரியவில்லை. ஒரு பெரிய மனுஷி தன் மாளிகையில் விருந்துக்கு வந்த மற்றப் பெரிய மனிதர்களை வரவேற்பதுபோன்ற குரலில் சொன்னாள்: "இப்படிக் கணப்பண்டை வந்து உட்காருங்கள், அப்பட் ஹான்ஸ். தங்கள் சிஷ்யனும் இங்கே வரலாம். இரவு உணவு ஏதாவது கையில் கொண்டுவந்திருந்தீர்களானால் அதை அருந்துங்கள்—ஏனென்றால் காட்டில் நாங்கள் வழக்கமாக அருந்தும் உணவு உங்களுக்குப் பிடிக்காது என்றே நினைக்கிறேன். நீண்ட பயணம் செய்திருக்கிறீர்கள்—களைப்பாயிருந்தால் இப்படியே படுத்து உறங்குங்கள். கிறிஸ்து பிறந்த உத்ஸவத்தை இக்காடு கொண்டாடும்விதத்தை

நீங்கள் பார்க்காமல் தூங்கிவிடமாட்டீர்கள். நான் விழித்துக்கொண்டிருப்பேன். தூங்கிவிடமாட்டேன். சரியான சமயத்தில் உங்களை எழுப்புகிறேன்'' என்ருள்.

அப்பட் ஹான்ஸ் தன்னுடன் உணவு கொண்டு வந்திருந்தார்; ஆனல் அதை எடுத்துச் சாப்பிட அவருக்குச் சிரமமாக இருந்தது. அவ்வளவு களைப்பு. உணவுகூட அருந்தாமல் சும்மாப் படுத்துவிட்டார். படுத்தவுடன் தூங்கியும் போய்விட்டார்.

அவருடைய சிஷ்யனும் படுத்துக்கொண்டான். ஆனல் அவனுக்குச் சுலபத்தில் தூக்கம் வரவில்லை. தூங்கிக்கொண்டிருப்பதுபோலப் படுத்திருந்த திருடன் விழித்துக்கொண்டு தங்களைக் கட்டிப் போட்டுவிட்டால் என்ன பண்ணுவது என்று பயந்தான். ஆனல் அவனும் அதிக நேரம் விழித்திருக்க முடியவில்லை. தன்னையும் அறியாமலே தூங்கிவிட்டான்.

சிஷ்யப் பிள்ளை மீண்டும் கண் விழித்துபார்த்த போது அப்பட் ஹான்ஸ் எழுந்துவிட்டார். எழுந்து கணப்புக்கருகே திருடனின் மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். திருடனும் விழித்துக் கொண்டுவிட்டான். அவன் முகத்திலே சோம்பல் பாவமும் உத்ஸாகமின்மையும் படர்ந்திருந்தன. தன் மனைவியும் அப்பட் ஹான்ஸும் பேசிக்கொண்டிருந்ததில் கலந்துகொள்ள அவனுக்கு விருப்பம் இல்லைபோலும். அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

திருடன் மனைவியிடம் அப்பட் ஹான்ஸ் கிறிஸ்துமஸைப்பற்றிப் பொதுவாகவும், கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாட ஜனங்கள் ஊரெங்கும் செய்து

கொண்டிருந்த ஏற்பாடுகளைப்பற்றியும் பேசிக்கொண் டிருந்தார். அவள் பழைய சிந்தனைகளில் ஈடுபட்டவ ளாக அதிகம் பேசாமல் இருந்தாள். அவளும் ஒரு காலத்தில் சாதாரண ஜனங்களிடையே சாதாரண மனுஷியாக சாதாரண வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்தவள்தான். அந்தக் காலத்தில் அவளும் கிறிஸ்து மஸ் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொண்டவள்தான். அந்த ஞாபகங்களே எவ்வளவு இன்பமாக இருந்தன!

"உன் குழந்தைகளை எண்ணி நான் துக்கப்படு கிறேன்" என்றார் அப்பட் ஹான்ஸ். "அவர்கள் சாதா ரண மக்களைப்போல இவ்விழாக் கொண்டாட்டங் களில் கலந்து கொள்வதற்கில்லையே!"

முதலில் திருடனின் மனைவி அதிகமாய்ப் பேச வில்லை. கேட்டதற்கு ஒவ்வொரு வார்த்தை பதில் அளித்தாள். சிறிது நேரம் கழித்து அப்படி வார்த்தை சொல்வதையும் நிறுத்திவிட்டாள். சிந்தனை அலைகள் மோதி மோதி அவள் முகத்திலே ஓர் ஆனந்தபாவம் படர்ந்தது. வாய் திறவாமல் அப்பட் ஹான்ஸ் சொல் வதை யெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந் திருந்தாள். திடீரென்று திருடன் திரும்பிச் சம்பாஷ ணையில் குறுக்கிட்டான். அப்பட் ஹான்ஸின் முகத் திற்கெதிரே முஷ்டியைத் தூக்கிக்காட்டினான்.

"மதகுருவாம்! மதகுரு வந்துவிட்டார். என் பெண்டாட்டி பிள்ளையை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போகவா நீ வந்தாய்? நாங்கள் காட்டை விட்டு வெளியே வரமுடியாது—வந்தால் எங்களைப்

பிடித்துச் சிறையில் அடைத்துவிட மாட்டார்களா? நாங்கள் காட்டைவிட்டு வெளிவரமுடியுமா?''

அவன் கோபத்தைக்கண்டு பயப்படாமல் அப்பட் ஹான்ஸ் சொன்னார்: "இதோ பார். நான் ஆர்ச் பிஷப்பு அப்ஸலனிடம் சொல்லியிருக்கிறேன், உன் குற்றங்களை மன்னித்து உன்னை மீண்டும் ஜனங்களிடையே அனுமதிக்கும்படியாக. நீ திரும்பவும் நகருக்கு வந்து மனிதர்களிடையே மனிதனாக வசிக்கலாம்.''

இதைச் செவியுற்ற திருடனும் திருடனுடைய மனைவியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆர்ச் பிஷப்பு அப்ஸலன் எப்படிப்பட்டவர் என்பது அவர்களுக்குத் தெரியும். அவராவது, அவர்களை மன்னிக்கவாவது! அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"நான் ஆர்ச்பிஷப்பு அப்ஸலனிடம் சொல்லியிருக்கிறேன்; அவர் கவனித்துச் செய்வார்'' என்று மீண்டும் சொன்னார் அப்பட் ஹான்ஸ். அவர் நிமிர்ந்து திருடனைப் பார்த்தார்—நேருக்கு நேராகப் பார்த்தார்.

அவர் பார்வையைக் கவனித்த திருடன் சொன்னான். "ஓ! அப்படி என்னை மன்னித்து மறுபடியும் ஜனங்களிடையே நடமாட அனுமதிப்பாரா ஆர்ச் பிஷப்பு—அப்படிச் செய்தாரானால் நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். இனி என் ஆயுளில் ஒருநாள் கூட நான் திருடமாட்டேன்—எதையுமே திருடமாட்டேன்—ஒரு சிறு வாத்துக் குஞ்சைக்கூடத் திருடமாட்டேன்!'' என்றான் அவன் உணர்ச்சியுடன்.

தன் முயற்சிகள் பலிக்கும் என்று அறிந்து அப்பட் ஹான்ஸ் சந்தோஷப்பட்டார். ஆனால் திருடனின் வார்த்தைகள் அவருடைய சிஷ்யனுக்குச் சந்தோஷ

மூட்டவில்லை. அதற்கு நேர் மாருக அவனுக்குக் கோபமூட்டின. தன் குருவைக் கேலி செய்கிருர்கள் என்று எண்ணினுன் அவன். ஆனுல் ஒன்றும் சொல்ல வில்லை. மடாலயத்தில் இருப்பதைவிட அதிகச் சந் தோஷமாக இருக்கிருர் தன் குரு என்பதைக் காண அவனுக்கே சந்தோஷமாக இருந்தது.

திடீரென்று திருடனின் மனைவி எழுந்தாள். "நீங் கள்பாட்டுக்கு ஒரு கவலையுமில்லாமல் இங்கு உட் கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறீர்களே, அப்பட் ஹான்ஸ்!" என்று கேட்டாள் அவள். "உங்களுக்குக் காது கேட்கவில்லையா? இயிங்கேவனம் தேவவனமாக மாறுவதைப் பார்க்க வேண்டாமா? மணிகளின் சப் தம் கேட்க ஆரம்பித்து விட்டதே! கிறிஸ்து பிறந்த விஞடி நெருங்குகிறது. அதன் ஞாபகார்த்தமாக தேவலோகத்து மணிகள் ஒலிக்கத் தொடங்கி விட் டனவே! என் காதில் கேட்கிறதே!" என்ருள்.

திருடனின் மனைவியின் காதில் தேவலோகத்து மணிகள் ஒலித்தன. அப்பட் ஹான்ஸும் அவர் சிஷ் யனும் உற்றுக் கேட்டார்கள்—அவர்கள் காதில் ஒன் றும் கேட்கவில்லை. தெய்வத்தின் வழிகளே விசித்திர மானவை என்று சிந்தித்தவராக அப்பட் ஹான்ஸ் சும்மா இருந்தார்.

"வாருங்கள் வெளியே போகலாம். வனத்திலே தெய்வ சாந்நித்தியம் தாண்டவமாடுவதைக் காண் போம்" என்று கூறிக்கொண்டே எழுந்தாள் திருட னின் மனைவி.

அப்பட் ஹான்ஸும், அவர் சிஷ்யனும், திருட னும், திருடனின் குழந்தைகளும் குதித்தெழுந்தார்கள்.

மரக் கதவைத் திறந்துகொண்டு குடிசைக்கு வெளியே சென்றார்கள்.

வெளியே கும்மிருட்டாக இருந்தது. ஒரே குளிராகவும் இருந்தது. கண்ணுக்கெட்டிய வரையில் இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இப்போது அப்பட் ஹன்ஸுக்கும் அவர் சிஷ்யனுக்கும் கூடக் காது கேட்டது. தென்றலில் மிதந்துவரும் மணிகளின் சப்தம்—எவ்வளவு இனிமையாக ஒலித்தது அந்த நள்ளிரவில், மனித சஞ்சாரமேயற்ற அந்தக் காட்டில்!

"ஆனால் இந்த மணிச்சப்தம் கேட்டு இக்காடு விழித்துக் கொள்ளுமா? எப்படி விழித்துக்கொள்ளும்? இக்காடு தேவவனமாக மாறும் என்று சொல்லித் திருடனின் மனைவி என்னை ஏமாற்றத்தான் ஏமாற்றி விட்டாளோ?" என்று ஆவலுடனும் ஆச்சரியத்துடனும் சந்தேகத்துடனும் தன்னையே கேட்டுக் கொண்டார் அப்பட் ஹான்ஸ். நாலா பக்கமும் பனி விழுந்து தரையெல்லாம் மூடியிருந்தது. மேலும் பனி பெய்துகொண்டே இருந்தது. ஒரே இருட்டு வேறு. ஒரு மரத்திலாவது இலை என்று பெயருக்குக் கூட இல்லை—ஒரு இலை, ஒரு பூ, ஒரு காய் இல்லாத கடுங்குளிர் காலம். திடீரென்று வெளிச்சமும், இலையும், பூவும், காயும், அழகும் எங்கிருந்துவரும்? இவ்வளவு நாழிகையாய் அவர் மனசில் ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கை அறுந்து விழுந்தது.

ஆனால் அதே சமயம் வனத்திலே மங்கலானதோர் வெளிச்சம் தோன்றத் தொடங்கியது. மணிகளின் ஒலியைப் பின்னணியாகக் கொண்டு 'அவ்வெளிச்சம் அலை அலையாக நாட்டியமாடிக்கொண்டே வனம் பூரா

வும் பரவுவது போலிருந்தது. வெளிச்சம் தோன்றித் தோன்றிப் பரவிப் பரவி மறைந்ததை கடல் அலைகளுக்குத்தான் ஒப்பிடமுடியும். நள்ளிரவில் உஷக் காலம் தோன்றுவது போலிருந்தது. அதை என்ன ஒளி என்று சொல்வது என்று அப்பட் ஹான்ஸுக்குத் தெரியவில்லை. தெய்விகமானதோர் ஒளி என்றுதான் சொல்லவேண்டும்.

அந்த ஒளி அலை பரவுவதைக் கவனித்துப் பலவிதமான சிந்தனைகளில் லயித்திருந்த அப்பட் ஹான்ஸ் தன் நினைவுபெற்று குனிந்து பார்த்தபோது தரையிலிருந்த பனி யெல்லாம் மறைந்து போய்விட்டது என்று கண்டார். பனி பெய்வதும் நின்றுவிட்டது. சில்லென்று குளிர்ந்து வீசிய காற்றும் ஓய்ந்துவிட்டது. மணம் நிறைந்த தென்றல் இன்பமாக வீசிக்கொண்டிருந்தது. பூமியின்மேல் போர்த்தியிருந்த மாரிக்காலத்துப் போர்வையை ஏதோ ஒரு மாயக்கை, தெய்விகமான கை எடுத்துவிட்டதுபோல இருந்தது. அப்பட் ஹான்ஸினுடைய கண் முன்னர் பூமியின்மேல் பச்சைப் போர்வை படர்ந்தது. புல்லும் பூண்டும் அடர்ந்து ஒரு நொடியில் வளர்ந்து தலை தூக்கின. எதிரே தெரிந்த குன்றுகளின் சரிவெல்லாம் திடுமென்று பச்சைப் பசேலென்றாகி விட்டது. விதவிதமான பூச்செடிகள் முளைத்துத் தலைதூக்கிப் பூத்துக் குலுங்கின. அந்த வர்ண விஸ்தாரமே அபூர்வமானதாக, அற்புதமானதாக இருந்தது—வேறு என்ன சொல்வது? தெய்விகமானதோர் வர்ண விசித்திரம் அது.

கோயிங்கே காடு விழித்தெழுந்துவிட்டது என்று கண்ட அப்பட் ஹான்ஸுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர் வியப்புக்கோர் அளவில்லை. "ஊவிட் மடத்தின் அதிபதி நான். கிழவன். என் வாழ்க்கையிலே புதிய தோர் அதிசயத்தை இக் கண்கள்கொண்டு காண நான் என்ன அதிர்ஷ்டம் செய்தேனே ?" என்று எண்ணினர் அப்பட் ஹான்ஸ். அவர் கண்கள் நிறைந்தன.

திடீரென்று வெளிச்சம் சற்று மங்கிற்று. மறுபடியும் முன்போல இருட்டிப் போய்விடுமோ என்று பயந்தார் அப்பட் ஹான்ஸ். ஆனல் மங்கிய வெளிச்சம் முன்னிலும் அதிகமாயிற்று. அலைமேல் அலையாக முன்னிலும் அதிகமாக வெளிச்சம் தெரிந்தது. அவ் வெளிச்சத்துக்குப் பின்னணியாக ஆறுகளின் சலசலப்பும் அவற்றின் இசையும் எழுந்தது. எங்கேயோ தூரத்தில் ஒரு நீர்வீழ்ச்சியின் சப்தம் கேட்டது. மொட்டை மரங்கள் துளிர்த்தன: ஒரு வினடியில் கோடிக் கணக்கான பச்சை வண்ணத்திப் பூச்சிகள் அந்தக் கிளைகளில் குடிபுகுந்ததுபோல் இருந்தது. காட்டிலே நடுமாரியில் தூங்கிக்கொண்டிருந்த மரங்களும் செடிகளும் மட்டுமே விழித்துக்கொண்டன என்பதில்லை. பறவைகளும் கோழிகளும் விழித்துக்கொண்டு விட்டன ; விதவிதமான குரல்களைக் கிளப்பின. மரங்கொத்திப் பறவைகள் டக்டக் என்று மரங்களின்மேல் சப்தப் படுத்தின. ஸ்டார்லிங் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்துவந்து மரங்களின்மேல்அமர்ந்து உத்ஸாகமாகக் குரல் எடுத்துப் பாடின. இப்படிப் பறவைகள் பறந்து திரிவது என்றுமில்லாத அதிசயமாகப்பட்டது அப்பட் ஹான்ஸுக்கு : விலையுயர்ந்த அற்புதமான நவரத்தினங்கள் இழைத்த அணிகளைக் காற்றிலே வாரி இறைத்ததுபோலிருந்தது.

மீண்டும் ஒரு விநாடி இருண்டது. மீண்டும் ஓர் ஒளி அலை வீசிற்று. மனோகரமான மணத்தைச் சுமந்து கொண்டு வந்தது தென்றல். அதே விநாடி தரையிலிருந்து பலவிதமான செடிகொடிகள் முளைத்துத் தழைத்தன. தன்னூரில் பயிராகக்கூடிய எல்லாச் செடிகொடிகளையும் பற்றி அறிந்திருந்த அப்பட் ஹான்ஸ் ஆச்சரியப்பட்டார். அந்த ஊரில் பயிராகாது என்று அவர் எண்ணியிருந்த செடிகளெல்லாம்கூட அன்று அங்கே காணப்பட்டன.

அவர் அப்படி ஸ்தம்பித்து நிற்கையில் அவர் கண்ணெதிரிலேயே மரங்களும் செடிகளும் காய்த்துக் குலுங்கின. நாரைகளும் காட்டு வாத்துக்களும் கிறீச்சிட்டுக்கொண்டு பறந்துவந்தன. சிட்டுகள் மரங்களின் உச்சியிலே கூடு கட்டத் தொடங்கின. அணில்கள் வாலைத் தூக்கிக்கொண்டு காடெங்கும் ஒலிக்கும்படியாகப் பேசின.

அந்த மாறுதலின் வேகத்தை அப்பட் ஹான்ஸால் கண்காணித்துக்கொள்ள இயலவில்லை. எவ்வளவு விந்தைகள் எவ்வளவு வேகமாக அவர் கண்ணெதிரே நடந்துகொண்டிருந்தன. இதெல்லாம் விந்தைகள்; எதன்பின் எந்த விந்தை நடந்தது என்று அறிந்துகொள்ளமாட்டாமல் தவித்தார் அப்பட் ஹான்ஸ். இது விந்தை என்று சிந்தித்துக்கொண்டிருக்கக் கூட அவருக்குப் போது இல்லை. அவர் கண்களுக்கும் காதுகளுக்கும் பூராத்திட்டம் வேலையிருந்தது.

அடுத்த ஒளி அலையிலே மிதந்துவந்தது—புதுசாக உழுது பண்படுத்தப்படும் வயல்களின் வாசனை. எங்கேயோ வெகு தொலையிலிருந்து இடைச்சிகள் தங்கள்

பசுக்களிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டே பால் கறந்துகொண்டிருக்கும் சப்தம் வந்தது. ஆட்டு மந்தைகளின் மணிகள் ஒலித்தன. மரங்களெல்லாம் சிவப்பும் நீலமும் மஞ்சளும் ஊதாவுமாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. பச்சையாகக் காய்த்தி ருந்த காய்கள் அப்பட் ஹான்ஸுடைய கண் எதிரே கனிந்து நிறம் மாறிப் பழுத்தன. பூக்கள் தரையெங்கும் விழுந்து பரவி விதவிதமான வர்ணம் காட்டின. ஏதோ மாயமான ரத்னகம்பளம் விரித்ததுபோல் இருந்தது.

அப்பட் ஹான்ஸ் குனிந்து காலடியில் பூத்திருந்த ஒரு பூவைப் பறித்தார். அதை அவர் கையில் எடுத்துக் கொண்டு நிமிர்வதற்குள் பூ, காயாக மாறிப்பழுத்துவிட் டது. காட்டில் ஒரு குகையிலிருந்து குள்ளநரி ஒன்றுவந் தது தன் குட்டிகளுடன். அந்தக் குட்டிகள்தான் எவ்வ ளவு அழகாக இருந்தன ! நரி நேரே திருடனின் மனைவி யண்டைவந்து உடம்பை வளைத்து அவள் காலில் தேய்த்துக்கொண்டு நின்றது, நாயைப்போல. அதனுடைய குட்டிகள் குழந்தைகளைச் சுற்றி விளையாடின. திருட னின் மனைவி குனிந்து நரியின் காதில் ஏதோ சொன் னாள். நரி அவள் சொன்னதைக்கேட்டு ஆனந்தப்படு வதுபோல் இருந்தது. திடீரென்று காட்டில் தோன் றிய வெளிச்சம் ஆந்தைகளுக்கும் கூகைகளுக்கும்தான் இடைஞ்சலாக இருந்தது. அவை பயந்து தங்கள் பொந்துகளுக்குள் புகுந்துகொண்டன, சேவல் கூவி ற்று. கக்கூ பறவைகள் சிறகடித்துப் பறந்துகொண் டிருந்தன.

திருடனின் குழந்தைகள் ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு கைக்கு எட்டிய பழங்களைஎல்லாம் பறித்துச்

சாப்பிட்டனர். வயிற்றுப்பசி ஆறியவுடன் அவர்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்த முயல் குட்டிகளுடனும், நரிக் குட்டிகளுடனும் விளையாடத் தொடங்கினர்கள். பறக்கத்தெரியாத சில பறவைக் குஞ்சுகள் கீழே விழுந்துகிடந்தன. அவற்றை எடுத்துப் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். அடுத்தபடியாக ஒரு பெரிய பாம்பையும் அதன் குட்டிகளையும் தோளில் எடுத்துப் போட்டுக்கொண்டு திரிந்தார்கள். பாம்புக்கும் அதன் குட்டிகளுக்கும்கூட அது விளையாட்டாகத்தான் இருந்தது.

திருடன் அன்றிரவு சாப்பிடவில்லைபோலும். அவனும் தன் குழந்தைகளைப்போலவே கையில் அகப்பட்டதை எல்லாம் பறித்துத் தின்றுகொண்டிருந்தான். ஒருவழியாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவன் குனிந்து பார்த்தபொழுது அவன் அண்டையில் சாதுவாக ஒரு கரடிவந்து நின்றுகொண்டிருந்தது. அதன் முதுகைத் தடவிக்கொடுத்தபடியே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவனக நின்றிருந்தான். பின்னர் "இதோ பார், கரடி! இது எனக்குச் சொந்தமான இடம். நீ இங்கு வரக்கூடாது" என்று சொல்லி ஒரு சிறு குச்சியை எடுத்து அதன் முகத்தில் அடித்தான். அவன் சொன்னதை அறிந்துகொண்டதுபோலக் கரடியும் ஒரு தரம் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு உடம்பைக் குலுக்கிக் குலுக்கிக்கொண்டே ஓடிப்போய்விட்டது.

மாரிக் காலத்துக் குளிர் மறைந்துவிட்டது. 'வஸந்தத்தின் உஷ்ணம், மனசுக்கும் உடம்புக்கும் குளுமையான உஷ்ணம், பரவியிருந்தது எங்கும். தெய்வீகமான ஒளி எங்கும் பரவி நின்றது. ஒரு சிறு குட்டையில்

நீந்திக்கொண்டிருந்த வாத்துகள் "க்ளக், க்ளக்" என்று குரல் எழுப்பிக்கொண்டிருந்தன. வஸந்தத்தின் மகரந்தப்பொடி, மாயப்பொடி காற்றிலே நிறைந்திருந்தது. தாமரைகள் ஆகாயத்திலே மிதந்து வருவதுபோல பலவித வர்ணமான வண்ணாத்திப் பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்தன. ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தின்பொந்திலிருந்து தேனடை நிரம்பி வெளியே வழிந்து சொட்டிக்கொண்டிருந்தது. உலகத்திலுள்ள அழகான மலர்ச் செடிகளெல்லாம் கிறிஸ்து பிறந்ததன் ஞாபகார்த்தமாகப் பூத்து ஈயிங்கே வனத்தை தெய்விகமான அழகு கொண்டதாகச் செய்தன. சில மலர்கள் பொடிப் பொடியாக நவரத்னங்கள்போல ஜ்வலித்தன. சில மலர்கள் பெண்ணின் முகாரவிந்தங்கள்போல அழகு கூடிப் பெரிதாக இருந்தன. ரோஜாக் கொடியொன்று மலையடிவாரத்தில் முளைத்து மலையுச்சி வரையில் ஒரே நொடியில் படர்ந்தது—நெடுகிலும் கண்ணைப் பறிக்கும் வன்னமலர்கள் பூத்துக் குலுங்கின. இதற்குப் போட்டியாகப் படர்ந்தது கருப்புப் பூவையுடைய ஒரு கொடி —அதன் பூக்களைப்போல அப்பட் ஹான்ஸ் எங்கேயும் கண்டதில்லை.

இது தேவ வனம்தான்; சந்தேகமில்லை. திருடனின் மனைவி அன்று சொன்னதுபோலவே இது அப்பட் ஹான்ஸினுடைய மடத்துத்தோட்டத்தைவிட அற்புதமானதுதான்; அழகானதுதான். சந்தேகத்துக் கிடமேயில்லை. இதை நினைக்கும்போது அப்பட் ஹான்ஸுக்கு இன்னொரு ஞாபகமும் வந்தது. ஆர்ச் பிஷப்பு அப்ஸலன் திருடனை மன்னிக்கும் விஷயமாகச் சொல்லியது ஞாபகம் வந்தது. இத்தேவவனத்தி

விருந்து ஒரு தேவ மலரைக் கொண்டுபோய்க் கொடுத்தால் அவர் அந்தத் திருடனை மன்னித்து மறுபடியும் மனிதர்களிடையே வாழ அனுமதி தந்துவிடுவார். ஆனால் இத்தேவ மலர்களில் எந்தமலரைப் பறித்து வைத்துக்கொள்ளுவது என்று அப்பட் ஹான்ஸுக்குத் தெரியவில்லை. ஒன்றைவிட ஒன்று அழகாகவும், அற்புதமாகவும் இருந்ததே! எல்லாவற்றிலும் சிறந்த மலரைக் கொண்டுபோய் அப்ஸலனுக்குக் காட்ட வேண்டுமென்று விரும்பினார் அப்பட் ஹான்ஸ்.

ஒளி அலைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து மேலும் வந்தன. காடுமட்டுமின்றி வானமும் ஒளியால் நிறைந்து பிரகாசம் பெற்றது. நிமிர்ந்து பார்ப்பது சிரமமான காரியமாக இருந்தது. கோடி சூரியப் பிரகாசம் என்பார்களே – அதெல்லாம் கற்பனையில்தான் என்று எண்ணியிருந்த அப்பட் ஹான்ஸுக்குப் புதிய ஞானம் பிறந்தது. வசந்தத்தின் காற்று, மணம், ஒளி, ஒலி எல்லாம் அப்பட் ஹான்ஸைச் சூழ்ந்திருந்தன. அப்போது கிறிஸ்து பிறந்ததின் ஞாபகார்த்தமாக இதைவிட ஆனந்தமான ஓர் அனுபவம் ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலே வேறு ஏற்படாது என்று நம்பினார் அப்பட் ஹான்ஸ். ஆனால் அவருக்கும் தெரியும். "அடுத்த அலையுடன் புதிய விந்தைகள், புது அற்புதங்கள், புது ஆனந்தங்கள், புது அழகுகள் தோன்றும்" என்று எண்ணியபோது அவர் மெய் சிலிர்த்தது.

இன்னமும் ஒளி அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. அவை எங்கிருந்து வந்தன என்று யாரால் சொல்ல முடியும்? தெய்வீகமான

ஒளி ; தெய்விகமான காற்று : தெய்வீகமான மணிகள் உத்ஸாகமாக ஒலித்துக்கொண்டிருந்தன, இன்னிசையாக ஒலித்துக்கொண்டிருந்தன. ஏதோ எட்டாத தொலேயிலிருந்து, கணக்கிடமுடியாத தூரத்திலிருந்து, அந்த மணிச் சப்தத்துக்கும் அப்பாலிருந்துவந்து ஓர் இசை அப்பட் ஹான்ஸின் காதில் விழுந்தது. அந்த ஒலி அவர் உள்ளத்தையே நாட்டியமாடச் செய்தது என்றுதான் சொல்லவேண்டும். கடவுளின் மகன் மனிதர்களுக் கிடையே அவர்கள் உய்வதற்கென்று திரு அவதாரம் செய்த நாளிலே தெய்வீகமான காரியங்கள் நிகழ்ந்தன என்று அப்பட் ஹான்ஸ் படித்திருந்தார். அந்த தெய்வீகமான காரியங்கள் எல்லாம் மீண்டும், தன்முன் ஒருமுறை நடக்கின்றன என்று உணர்ந்தார். கிறிஸ்து ஜனித்த தினத்தின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருஷமும் இவ்விதத் தெய்விகமான மாறுதல்கள் நேரத்தான் நேருகின்றன என்பது அவர் அறிந்த விஷயந்தான். ஆனுல் தன் கண் முன்னரே, தன் ஊனக் கண்கள் கொண்டு பார்க்கும்படியாக, இம்மாயங்கள், இத்தெய்வீக காரியங்கள் நிகழுமென்று அவர் எதிர்பார்க்கவில்லே. கற்பனேயில் எதிர்பார்த்திருந்தாலும், ஏதோ கொஞ்சமே எதிர்பார்த்திருக்க முடியும் - நடந்தது அவ்வளவையும் அவரால் எதிர்பார்த்திருக்க முடியாது என்பது நிச்சயமே. கற்பனே எல்லேயையும் கடந்ததாக இருந்தது அவர் கண்முன் அன்று நடந்த காரியங்கள். இன்னும் என்னென்ன நடக்குமோ, இன்னும் என்னென்ன கண்டுகளிக்க வேண்டுமோ அவ்வளவையும் கண்டுவிடுவது என்று மனசையும், கண்களே

யும், செவிகளையும் திட்டிக்கொண்டு நின்றார் அப்பட் ஹான்ஸ்.

திடீரென்று எல்லா ஒலிகளும் அடங்கிவிட்டன. சப்தமில்லாமைக்கே லக்ஷியமாக எடுத்துக்காட்டக் கூடிய ஒரு மௌனம் நிலவியது சில விநாடிகள். பக்ஷிகள் கூடக் கூவுவதை நிறுத்திவிட்டன. நரிக் குட்டிகளும் நிச்சலமாக இருந்தன. பூக்கள் மலருவதையும் மறந்தன. அதுவரை விநாடிக்கொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்த செடி கொடிகளெல்லாம் வளர்ச்சியின் பூரணத்தை எட்டிவிட்டன போல் நின்றன. ஏதோ ஒன்று - என்னவென்று அதை விவரிப்பது - தெய்வீகமான ஒன்று அணுகிக்கொண்டிருப்பதை அப்பட் ஹான்ஸ் உணர்ந்தார். அவர் இதயத் துடிப்புகூட அந்த விந்தையைக் கவனிப்பதிலே நின்றுவிட்டதுபோ லிருந்தது. அவர் ஆத்மா ஈசனை எட்டித் தொட விரும்பியதுபோல இருந்தது. வெகு தூரத்துக்கப்பா லிருந்து யாழ்மீட்டப்படுவதுபோல த்வனி கேட்டது - அதனுடன் இசைந்து பலர் பாடுவது போலவும் இருந்தது. அந்த யாழையும் இசையையும் என்ன வென்று சொல்லுவது ? தெய்வீகமானது என்றுதான் சொல்லவேண்டும். அந்த யாழும் குரலும் இசைந்து மனசையும் இதயத்தையும் ஆத்மாவையும் உருக் கின்று - உருகிப் பாகாய் ஓடச் செய்தது.

அப்பட் ஹான்ஸ் கையைக் கட்டிக்கொண்டு மண்டியிட்டு தலையைக் குனிந்து வணங்கினார். வணங் கியபடியே இருந்தார். அவர் முகத்திலே ஆனந்த பரவசம் படர்ந்தது. தன் வாழ்நாளிலே இது சாத்திய

மான காரியமென்று அவர் நம்பியிருந்ததில்லை. ஏதோ புண்ணியம் அதிகம் பண்ணுவிட்டாலும், பாவம் அதிகம் தெரிந்து செய்யாததால் மேல் உலகத்தில், கடவுளின் ஆனந்த உலகத்திலே, ஒரு மூலையில் தனக்கென்று ஓர் இடம் கிடைக்கும், அங்கிருந்தபடியே தேவர்கள் பாடுவதையும் ஆடுவதையும் ஆனந்தப் படுவதையும் பார்க்கலாம் என்று அவர் எண்ணிய துண்டு. தேவலோகத்துக் காட்சிகளை அவர் அன்று அத்திருடனுடைய மனைவியின் உதவியால் கண்டு கொண்டார். தேவர்கள் கிறிஸ்துமஸ் பாட்டுகளைப் பாடிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். அவர் உள்ளத்திலே மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிக் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

இவ்வளவு நேரமும் அப்பட் ஹான்ஸினுடைய சிஷ்யப் பிள்ளை என்ன செய்துகொண்டிருந்தான்? தன் குருவின் பக்கத்திலே நின்றுகொண்டு எல்லா விந்தைகளையும் அவனும் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். ஆனால் அப்பட் ஹான்ஸின் மனசில் இருந்ததுபோல அவன் மனசில் மகிழ்ச்சியோ, ஆனந்தமோ, திருப்தியோ தோன்றவில்லை. அவன் மனசும் உள்ளமும் இருண்டு கிடந்தன. அவன் சிந்தனைகளிலே இருண்ட எண்ணங்கள், பயங்கரமான ஞாபகங்கள் ஊசலாடின. அவன் நினைத்தான்: “இம்மாயங்கள் எல்லாம் உண்மையில் தெய்வீகமானவையாக இருக்க முடியாது என்பது நிச்சயம். மடாதிபதி, ஆர்ச்பிஷப்பு, அப்பட் இவர்கள் கண்ணிலெல்லாம் படாத அதிசயங்கள் குற்றவாளிகளான இத்திருடனுக்கும், திருடன் குடும்பத்தாருக்கும் வருஷா வருஷம் படுவதால் இதில்

ஏதோ சூது இருக்கத்தான்வேண்டும். கடவுளின் செயலாக இராது - கடவுளுக்கு எதிரியான சைத்தானின் காரியமாகத்தான் இருக்கவேண்டும். அவன் சூதுதான் இது; நமது மனசை மயக்கி, அந்தகாரத்தில் மூழ்க அடித்து ஏமாற்றுகிற வித்தையே தவிர வேறு அல்ல. இல்லாததெல்லாவற்றையும் இருப்பதுபோலக் காட்டி நம்மை ஏமாற்றுகிறான் சைத்தான்" என்று எண்ணினான்.

தேவர்கள் யாழ் மீட்டிப் பாடிக்கொண்டு நெருங்கினார்கள். அவர்களைச் சுற்றிலும் எவ்வளவு அற்புதமான ஒளி வீசிக் கொண்டிருந்தது? அவர்கள் உருவங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அஞ்சி அப்பட் ஹான்ஸ் ஒரு வினாடி பார்ப்பதும், ஒரு வினாடி கண்ணைத் தாழ்த்திக் கொள்வதுமாக இருந்தார். அவருடைய சிஷ்யப் பிள்ளையின் கண்களிலும் அந்தத் தேவர்கள் பட்டார்கள். அவர்களுடைய இன்னிசை அவன் காதிலும் விழுந்தது. ஆனால் இந்த அழகெல்லாம் தெய்விகமான அழகென்று அச்சிஷ்யன் நினைக்கவில்லை. சைத்தானின் கைத்திறமை என்றே எண்ணினான். எண்ணிப் பயந்தான். கிறிஸ்து பிறந்த தினத்தன்று இப்படியெல்லாம் சைத்தானுக்கு இடம் கொடுப்பது தவறு என்று எண்ணினான். தனது குருவை ஏமாற்றுவதற்காகவே திருடனுடன் சேர்ந்துகொண்டு சைத்தான் இப்படிச் சூழ்ச்சி செய்கிறான் என்று அவன் எண்ணினான்.

இன்னொரு விசேஷமும் இருந்தது. அப்பட் ஹான்ஸை நெருங்கி அவர் மேல் உட்கார்ந்து, உறவாடிய பறவைகள் எல்லாம் அவருடைய சிஷ்யப்

பிள்ளையைக் கண்டு மிரண்டு பயந்து ஓடின. மிருகங்களோ அவன்பக்கம் போகவேயில்லை. அவன் பாம்பைக் கண்டு மிரண்டானே இல்லையோ, பாம்பு அவனைக் கண்டு மிரண்டது. ஒரே ஒரு புருமட்டும் சற்று அசட்டுத் தைரியத்துடன் சிஷ்யன் பக்கம் பறந்து போய் அவன் தோளில் உட்கார்ந்தது. வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த சிஷ்யப்பிள்ளை சைத்தான் தான் தன் தோள் மேல் வந்து உட்கார்ந்துவிட்டான் என்று பதறித் துடித்து அலறினன். தன்னையும் மயக்க வந்துவிட்டான் சைத்தான், மற்றவர்களை மயக்கியதுபோல என்று எண்ணினன். உடனே அந்தப் புருவைக் கைகளால் விரட்டினன்; உரத்த குரலில் சொன்னன்: "நரகத்திலிருந்து வந்தவனே! சைத்தானே! ஓடிப்போ" என்று காடு முழுவதும் எதிரொலிக்கும்படியாகக் கூவினன்.

அந்த சமயம் யாழுடன் பாடிக்கொண்டு வந்த தேவர்கள் அப்பட் ஹான்ஸண்டை வந்துவிட்டார்கள். அவர்களுடைய இறக்கைகளின் அசைவின் சப்தம் அப்பட் ஹான்ஸினுடைய காதில் தெளிவாக ஒலித்தது. கடவுளைப் பாடி வந்த அந்தத் தேவர்களை ஆனந்தத்துடனும் அன்புடனும் தாழ்மையுடனும் வணங்கினர் அப்பட் ஹான்ஸ். அதே சமயம் அவருடைய சிஷ்யனின் "சைத்தான், ஓடிப்போ!" என்ற குரல் காடு முழுவதும் ஒலிக்கும்படி எழுந்தது. உடனே இசை ஒலி நின்றது. தேவகானம் பாடிக்கொண்டு வந்த தேவர்கள் தயங்கி ஒரு விநாடி நின்று மௌனமாகத் திரும்பிச் செல்லத் தொடங்கினர்கள். அப்பட் ஹான்ஸினுடைய சிஷ்யன் மனசில் இருந்ததுபோலவே, இருட்

டும் பயங்கரமும் குழப்பமும் வெளியேயும் ஆட்சி செலுத்தத் தொடங்கிவிட்டன. கடவுளின் அருள் மனிதனை அன்று அவ்வளவு நெருங்கி வந்தது. மனிதனின் மனசிலே ஆட்சி செலுத்திய அவநம்பிக்கையையும், இருளையும் கண்டு மிரண்டு தேவ தூதர்களும் திரும்பிவிட்டார்கள். எவ்வளவு அதிசயமாக எல்லாம் நிகழ்ந்ததோ அவ்வளவு அதிசயமாக ஒரே வினாடியில் எல்லாம் மறைந்துவிட்டது. குளிரின் முதல் அலை வீசத் தொடங்கியது. இருண்ட இரவின் ஆட்சி கொஞ்சம் கொஞ்சமாக சற்றும் எதிர்ப்பின்றி வலுத்தது. மறுபடியும் பனி விழ ஆரம்பித்துவிட்டது. செடி கொடிகள் உயிரிழந்தன. மிருகங்கள் சிறிக்கொண்டே உறுமிக்கொண்டே குகைகளுக்குள் பதுங்கிவிட்டன. பறவைகள் வாயோய்ந்து பாட மனமில்லாது கூடுகளுக்குள் அடங்கிவிட்டன. ஆற்றின் சலசலப்பு நின்றுவிட்டது. மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்தன. மழை பெய்வதுபோலச் சப்தம் கேட்டது.

எல்லாவற்றையும்விட அதிகமாக அந்தக் குளிரும் இருட்டும் அப்பட் ஹான்ஸினுடைய இதயத்தைப் பாதித்தன. பேரானந்தம் நிறைந்திருந்த அவர் உள்ளம் ஒரே வினாடியில் எல்லை காணாத துக்கத்தில் ஆழ்ந்தது.

"இந்தத் துக்கத்தைச் சகிக்க என்னால் இயலாது. இதை மீறி என்னால் வாழ முடியாது என்பது நிச்சயம். தேவலோகத்திலிருந்து வந்த தேவர்கள் என்னை அணுகினார்கள். எனக்குக் கிறிஸ்துமஸ் பாடல்களைப் பாடிக் காட்டினார்கள். இன்னும் பாடியிருப்பார்கள். எல்லை அற்ற இன்பத்தைக் கண்டிருப்பேன் நான். அவர்கள் துரத்தப்பட்டார்கள். மனிதனின் அவநம்பிக்கை என்

னும் சைத்தான் அவர்களைத் துரத்தி விரட்டிவிட்டது. என் செய்வேன்?" என்று துக்கம் தாளாமல் முனகினார் அப்பட் ஹான்ஸ்.

ஆனால் அந்த நிமிஷத்திலும் அவருக்கு ஞாபகம் இருந்தது, திருடனுக்கு மன்னிப்பு வாங்கித் தருவதாகத் தான் சொல்லியிருந்த விஷயம். ஆர்ச் பிஷப்பு அப்ஸலனுக்குத் தான் மலர் கொண்டுவந்து தருவதாகச் சொன்ன விஷயம் ஞாபகம் வந்தது. தேவ வனத்திலிருந்து ஒரு தேவ மலர் கொண்டு போய் ஆர்ச் பிஷப்பிடம் காட்டிவிட்டால் அவர் அந்தத் திருடனை மன்னித்துவிடுவார். தேவ வனம் கண்ணெதிரே மறைந்து அழிந்துகொண்டிருந்தது. கடைசி நிமிஷத்தில் அப்பட் ஹான்ஸ் கீழே விழுந்து தன் கையில் அகப்பட்ட புஷ்பத்தைப் பறிக்க முயன்றார். ஒரு மலர்—சற்றுமுன் அங்கு செழித்துக் கிடந்த வனத்திலிருந்து ஒரு மலர் பறித்துவிட வேண்டுமென்று அவர் முயன்றார். தரையில் பட்ட அவர் கைகள் சில்லிட்டன. தரை சற்று முன் இருந்த நிலை மாறி மீண்டும் பனியால் மூடப்பட்டிருந்தது. பனிப் போர்வைக்குள் விரல்களால் துளாவினார் அப்பட் ஹான்ஸ். கையில் ஏதோ கிழங்குபோல ஒன்று அகப்பட்டது. அதை எடுத்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். எழுந்திருக்க முடியவில்லை. நெடுஞ்சாங்கடையாகக் கீழே விழுந்தார். விழுந்தபடியே கிடந்தார்.

அவர் அப்படிக் கீழே விழுந்துகிடந்ததை யாரும் கவனிக்கவில்லை. மீண்டும் இருட்டிவிட்டது; பனி பெய்தது; மாரிக்காலம் தோன்றிவிட்டது என்று கண்டவுடன் திருடனும் அவன் மனைவியும் குழந்தை

களும், சிஷ்யனும் திருடனுடைய குடிசைக்குத் திரும்பிவிட்டார்கள். இருட்டிலே தட்டுத் தடுமாறிக் கொண்டு திரும்பினார்கள். குடிசையினுள் எரிந்த சிறு விளக்கு வெளிச்சத்தில் போய் நின்ற பிறகு தான் அப்பட் ஹான்ஸ் தங்களுடன் குடிசைக்குத் திரும்பி வரவில்லை என்று அறிந்தார்கள். கணப்பில் எரிந்துகொண்டிருந்த நாலைந்து கட்டைகளை எடுத்துக்கொண்டு, குடிசைக்கு வெளியே அவர்கள் வந்து அப்பட் ஹான்ஸைத் தேடினார்கள்.

பனியின்மேல் இறந்து கிடந்தார் அப்பட் ஹான்ஸ்.

அவருடைய சிஷ்யன் அடித்துக்கொண்டு அழுதான். தன்னால்தான் அப்பட் ஹான்ஸ் உயிர் இழக்க நேரிட்டது என்று அவனுக்குச் சந்தேகமில்லாமல் தெரிந்தது. எல்லையற்ற ஆனந்தசாகரத்தின் கரையிலே நின்றிருந்த அவர் அதிலே இறங்க முடியாமல் செய்துவிட்டான். சைத்தானின் சூழ்ச்சி என்று எண்ணி அத்தேவ வனத்தையும் அத்தேவ ஆனந்தத்தையும் அழித்துவிட்டான். பாபிதான் அவன்! கிண்ணத்திலே தேவமது, தேவாமிர்தம் நிரம்பியிருந்தது. அதை அவர் கையில் எடுத்து அருந்துவதற்கு வாயண்டை கொண்டுபோனார். அந்த வினாடியில் அவர் கையிலிருந்து கிண்ணத்தைத் தட்டி விட்டுவிட்டான் சிஷ்யன். பாபிதான் அவன். சந்தேகம் என்ன?

அப்பட் ஹான்ஸினுடைய சடலத்தை ஊவிட் மடத்துக்குத் தூக்கிச் சென்றார்கள். உடலைக் கழுவிக் கிடத்த முயலும்போது அவர் வலது கை மூடியிருப்பதை சிஷ்யர்கள் கண்டார்கள். சாகும் சமயத்தில் அவர் கையில் எதையோ பற்றிக்கொண்டிருந்தார் போலும். கையைப் பிரித்துப் பார்த்தபோது கைக்குள் இரண்டு கிழங்குகள் இருப்பது தெரிந்தது—சிறு கிழங்குகள். எந்தமாதிரியான செடியின் கிழங்குகள் அவை என்பது யாருக்கும் தெரியவில்லை.

ஓயிங்கே காட்டுக்குள் அப்பட் ஹான்ஸுடன் போய்வந்த சிஷ்யன் அந்தக் கிழங்குகளைக் கொண்டு போய் அவருடைய தோட்டத்தில் ஊன்றி வைத்தான். அவை எப்படி முளைக்கின்றன முளைத்துத் தழைக்கின்றன பூக்கின்றன என்று பார்க்கவேண்டும் என்று தன் கையாலேயே தண்ணீர் விட்டு தினம் கவனித்து வந்தான். பூக்குமா, பூக்காதா என்றுகூடத் தெரியவில்லை. அது வளமாகக்கூட வளரவில்லை. வஸந்தம் வந்து போயிற்று: கோடை வந்துபோயிற்று; இலையுதிர்காலம் வந்து போயிற்று. அடுத்த மாரிக் காலமும் வந்தது. அப்பட் ஹான்ஸினுடைய தோட்டத்திலிருந்த செடி கொடிகளெல்லாம் அழிந்துவிட்டன: அழுகிவிட்டன. சிஷ்யன்கூட இப்பொழுதெல்லாம் தோட்டத்திற்குள் போவதில்லை: என்ன இருக்கப் போகிறது என்ற சிந்தனைபோலும்.

சரியாக ஒரு வருஷமும் கழிந்துவிட்டது. மறுநாள் விடிந்தால் கிறிஸ்துமஸ். அப்பட் ஹான்ஸுடன் தான் ஓயிங்கே வனத்துக்குப்போய் வந்ததுபற்றி அன்று சிஷ்யனுக்கு ஞாபகம் வந்தது. புனிதமான தன் குரு

வைப்பற்றிய ஞாபகங்களைத் தனிமையில் அவருடைய தோட்டத்தில் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவன் தோட்டத்திற்குள் சென்றான். அங்கு ஓர் அபூர்வமான விஷயம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. அப்பட் ஹான்ஸ் கையில் இருந்த கிழங்குகளை நட்டிருந்த இடத்தில் ஏதோ ஒரு செடி முளைத்திருந்ததைக் கண்டான். பச்சைப் பசேலென்ற இலைகளுடன் அது வளர்ந்திருந்தது வியப்பான விஷயம் தான். தேவ வனத்திலிருந்துவந்த அந்தக் கிழங்கு கிறிஸ்து பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக இப்பொழுது முளைத்து இலைகள் விட்டிருந்தது. அற்புதமாகப் பூத்தாலும் பூக்கும் என்று எண்ணும்போது சிஷ்யனின் மெய் சிலிர்த்தது. அதே விநாடி அந்தச் செடியிலே அழகான புஷ்பங்கள், வெள்ளியும் தங்கமுமாக மலர்ந்து கண்ணை மயக்கின.

ஓட்டமும் நடையுமாகப் போய் மடத்திலிருந்த மத குருமாரையும், சிஷ்யர்களையும் கூப்பிட்டுக் கொண்டு வந்தான். அகாலத்தில் முளைத்துத் தழைத்து மலர்ந்திருந்த அந்தச் செடியைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியத்தில் அழுந்தினார்கள். உலகத்திலே வேறு எங்கும் இல்லாத அதிசயம் அது. தேவ வனத்திலிருந்து அப்பட் ஹான்ஸ் தன் உயிரையும் கொடுத்து கொண்டு வந்திருந்த அந்த தேவ மலர்ச்செடியை வணங்கவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றிற்று.

அந்தச் செடியில் பூத்திருந்த சில மலர்களைப் பறித்துக்கொண்டு போய் ஆர்ச் பிஷப்பு அப்஭லனிடம் கொடுக்கவேண்டும் என்று அப்பட் ஹான்ஸினுடைய சிஷ்யனுக்குத் தோன்றிற்று. ஆர்ச் பிஷப்புக்கும் அப்

பட் ஹான்ஸுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகள் அவனுக்குத் தெரியும். ஆகவே நேரே ஆர்ச் பிஷப்பண்டை போய் அந்த மலர்களைக் கொடுத்து விட்டு அவன் சொன்னான் :

"அப்பட் ஹான்ஸ் இந்த மலர்களை உங்களிடம் அனுப்பி இருக்கிறார் : போன கிறிஸ்துமஸ் அன்று கியிங்கே வனத்தில் அப்பட் ஹான்ஸ் பறித்து தங்களிடம் கொடுக்கவேண்டுமென்று எண்ணியவை இவை தான்."

நடு மாரியில், புல் பூண்டெல்லாம் செத்து அழுகிக் கிடக்கையில், மலர்ந்த அத்தேவ மலர்களை ஆச்சரியத்துடன் பார்த்தார் ஆர்ச் பிஷப்பு அப்ஸலன். அப்பட் ஹான்ஸினுடைய சிஷ்யன் சொன்ன வார்த்தைகளையும் கவனித்தார். ஏதோ ஒரு விந்தையைக் கண்டவர் போலப் பிரமித்து நின்றார். நீண்டநேரம் மௌனமாக இருந்தார். பின்னர் சொன்னார் :

"தான் கொடுத்த வாக்கை அப்பட் ஹான்ஸ் நிறைவேற்றி விட்டார். நானும் என் வாக்கைக் காப்பாற்றி விடுகிறேன்" என்றார் ஆர்ச் பிஷப். உடனே தன் குமாஸ்தாவைக் கூப்பிட்டு மன்னிப்புக் கடிதம் எழுதும் படி உத்தரவிட்டார். திருடன் மீண்டும் மனிதர்களிடையே மனிதனாக நடமாடலாம். அவன் செய்திருந்த குற்றங்களை யெல்லாம் மன்னித்தாகி விட்டது என்று விளம்பரம் செய்யச் சொன்னார். மன்னிப்புக் கடிதத்தை மலர்களைக் கொண்டுவந்த சிஷ்யனிடம் கொடுத்து அனுப்பினார்.

காலந் தாழ்த்தாமல் அன்றிரவே சிஷ்யன் புறப்பட்டு திருடனைத் தேடிக்கொண்டு கியிங்கே காட்டிற்

குப் போனுன். கிறிஸ்துமஸ் தினத்தன்று அதிகாலையில் திருடனுடைய குடிசையை அடைந்தான். அவனைப் பார்த்தவுடன் திருடன் கோபமாகக் கையில் ஒரு கோடாலியைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

“ உன்னையும், மடத்தைச் சேர்ந்த உன்னைப்போன்றவர்களையும் வெட்டிக் கண்ட துண்டமாக்கி விட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்களும் கிறிஸ்தவர்களா ? ” மேலும் சொன்னுன் : “ உன்னுல் தான் நேற்று இரவு இவ்வனத்தில் வழக்கம்போல கிறிஸ்துமஸ் மலர்கள் மலரவில்லை.”

“ என்னுல்தான் என்று ஒப்புக்கொள்கிறேன். நான் செய்த தவறுதான் அது. நான் செய்த தவறுக்காக நான் என் உயிரைக் கொடுக்கவும் தயாராகவே இருக்கிறேன். ஆனுல் நான் சாவதற்குமுன் ஒரு காரியம் உங்களிடம் சொல்லவேண்டும். அப்பட் ஹான்ஸிடமிருந்து வந்திருக்கிறேன். அவர் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்த ஒரு காரியத்தைச் செய்ய வந்திருக்கிறேன்.” இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் ஆர்ச் பிஷப்பினுடைய மன்னிப்புக் கடிதத்தை திருடன் கையில் கொடுத்தான். இனிமேல் திருடன் யாருக்கும் பயந்து காட்டில் ஒளிந்துகொள்ள வேண்டியதில்லை என்று தெரிவித்தான். “ இனிமேல் நீயும் உன் மனைவியும் உன் குழந்தைகளும் காட்டிலே தனியாகக் கிடந்து அவஸ்தைப்பட வேண்டியதில்லை. மற்றவர்களைப்போல நீயும் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடலாம். கோயிலுக்குப் போகலாம். மனிதனுகிவிட்டாய் நீ—அப்பட் ஹான்ஸின் முயற்சியால்

மீண்டும். சாகும்போது கூட அவர் உன்னை மறக்க வில்லை."

திருடனுக்கு நம்பிக்கை வரவில்லை. வெகுநேரம் ஸ்தம்பித்துப் போய் அப்படியே நின்றான். முகம் முதலில் வெளிரிட்டது. பின்னர் இரத்தமேறிச் சிவந்தது. என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தான். திருடனுக்குப் பதில் அவன் மனைவி தான் கடைசியில் பதில் அளித்தாள்.

"அப்பட் ஹான்ஸ் தன்னுடைய வார்த்தையைக் காப்பாற்றி விட்டார். என் கணவனும் தன் வார்த்தையைக் காப்பாற்றுவான். அவன் இனித் திருடமாட்டான். மனிதர்களிடையே யோக்கியனாக வாழுவான்" என்றாள்.

திருடனும் திருடனுடைய மனைவியும் குழந்தைகளும் அக்குடிசையைவிட்டு நகருக்குப் புறப்பட்டனர். அவர்கள் போனபின் அப்பட் ஹான்ஸினுடைய சிஷ்யன் அங்கே நடுக் காட்டில் குகையில் குடியேறினான். தான் செய்த பாபத்துக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்ய விரும்பினான் அவன். தன் காலத்தை சிந்தனையிலும் பிரார்த்தனையிலும் கழித்தான். தவம் செய்தான்.

ஆனால் கியிங்கே காட்டிலே அதற்கப்புறம் எந்தக் கிறிஸ்துமஸ் இரவிலும் எவ்விதமான மாறுதலும் நேருவதில்லை. அதற்குப் பிறகு தேவ வனம் யார் கண்ணிலும் பட்டதில்லை. அத்தேவ வனத்தின் ஞாபகார்த்தமாக இப்போது இருப்பதெல்லாம் ஊவிட்

மடத்திலே அப்பட் ஹான்ஸினுடைய தோட்டத்திலே உள்ள அந்த ஒரு செடிதான். அந்தச் செடிக்கு கிறிஸ்துமஸ் ரோஜாச் செடி என்றும் அதில் பூக்கும் பூக்களை தேவமலர்கள் என்றும் ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் அச்செடி கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்திய இரவு பூக்கிறது. நடு மாரிக் காலத்திலே உலகத்தில் மற்றெல்லாச் செடிகளும் இலைகள் கூட இல்லாமல் அழிந்துபோய் நிற்கும் சமயத்திலே அது பசேலென்று இலை தளிர்த்து வெளேரென்று பூக்கிறது. உண்மையிலேயே அது தேவமலர்தான்.

எமது இதர வெளியீடுகள்


		ரூ.	அ.
ஹேமாங்கினி	சரத் சந்திரர்	0	12
ஸந்தியா	சரத் சந்திரர்	1	8
உஷா	சரத் சந்திரர்	1	8
அநுராதா	சரத் சந்திரர்	1	0
சீதா	துவிஜேந்திரலால் ராய்	1	8
தெய்வ ஜனனம்	க. நா. சுப்ரமண்யம்	1	4
அயர்லாந்து	எஸ். எஸ். மாரிசாமி	1	12
காணுமலே காதல்	கு. ப. ராஜகோபாலன்	1	12
பிரேத மனிதன்	'புதுமைப்பித்தன்'	1	0
ராதையின் பிரார்த்தனை	து. ரா.	1	8
ஸ்டர்லிங் நிதி	ஆர். வேங்கடராஜுலு	1	12
துருக்கி	எஸ். எஸ். மாரிசாமி	1	0
பசி (நாவல்)	க. நா. சு.	2	8
சினிமா (படங்களுடன்)	பி. எஸ். ராமையா	3	8
விஜயம் (நாவல்)	வ. ரா.	3	8

அடுத்த வெளியீடுகள்

மலரும் மணமும் (கதைகள்)	பி. எஸ். ராமையா
விடி வெள்ளி (கதைகள்)	ரா. ஆறுமுகம்
ஊர்வசி (நாடகங்கள்)	ந. சிதம்பர சுப்ரமண்யன்
சர்மாவின் உயில் (நாவல்)	க. நா. சு.
லீலா (நாவல்)	'ஆண்டாள்'
சைலஜா (சரத் சந்திரர் நாவல்)	பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
குலவதி (கதைகள்)	சேது அம்மாள்

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை



Cover Printed at P. A S Press, Post Box 349, Mount Road, Madras